பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 3	ஞாயிறு 21-1-40 பிரமாதி௵ தைமீ 8உ	முத்து 11

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
வைஸ்ராய் பிரசங்கம்		318
ஆசிரியருக்குக் கடிதம்		320
டாக்டர் ரங்காச்சாரி		321
உலக வர்த்தமானம்		322
இது தெரியுமா?		323
ரஷ்ய வெளி நாட்டுக் கொள்கை ...	ஏ. ஜி. வேங்கடாச்சாரி பி.ஏ.	324
கனு		328
கருப்பன் தீபாவளி	எஸ். லக்ஷ்மிநாராயணன் பி.ஏ.	329
தமிழ் நூல் தொகை	த. கிருஷ்ணமூர்த்தி	332
கருணாஹரன்	என். ரங்கநாதன்	334
சிறுவர் பகுதி	எஸ். ஸோமஸ்கந்தன்	338

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

வைஸ்ராய் பிரசங்கம்

இதுவரையில் 20 வருஷகாலமாய் பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவின் அரசியல் கோரிக்கையைப் பற்றி சமயோசிதமாய் விட்ட அறிக்கைகள் பல உள. டொமினியன் பதவி இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் 'நடக்க' ஆரம்பித்து விட்டதென்று 10 வருஷத்திற்கு முந்தியே இந்திய காரியதரிசி ஒருவர் சொற்பொழிவில் வன்மையாய் பேசியிருக்கிறார். ஆனால் அதன் பலன் நமக்கொன்றும் இதுவரையில் தெரியவில்லை. வருஷா வருஷம் காங்கிரஸ், பிரிட்டிஷ் சர்க்காரை சுயராஜ்ய விஷயமாக வற்புறுத்திக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

ஆனால் இந்த ஐரோப்பிய யுத்தம் ஆரம்பமான பிறகு வைஸ்ராயும் இந்திய காரியதரிசியும் பலதடவைகளில் இந்திய அரசியல் முடிவின் நோக்கத்தைப் பற்றி பலதடவை பேசியிருக்கிறார்கள். இவைகளில் சென்ற வாரம் பம்பாயில் வைஸ்ராயின் பிரசங்கம்தான் முக்கியமானது. தெளிவுடன் எடுத்து நோக்கங்களை அவர் வெளியிட்டிருக்கிறார். இந்த பாகத்தில் வார்த்தைகளில் பொடி வைக்காமல் பேசியிருக்கிறார். அதுவரையில் க்ஷேமந்தான்.

ஆனால் சொல்லை செயலுக்கு கொண்டு வருவதல்லவோ இந்த நெருக்கடியில் முக்கியம். அப்படி செயல் ரூபமாய் காட்ட வேண்டிய வழிகளை குறிப்பிடும்பொழுது தான் பல சிக்கல்களையும் கலந்து பேசியிருக்கிறார். அதுதான், உண்மையான தேசபக்தனுக்கும் லோகோபகாரத்தை தேடுபவனுக்கும் வருத்தத்தையும், ஏக்கத்தையும உண்டு பண்ணுகிறது. அது என்னவென்று பார்ப்போம்.

வைஸ்ராயின் பிரசங்கத்தில் ஸ்டாட்யூட் ஆப் வெஸ்ட் மினிஸ்டருக்கு (Statute of Westminster) கட்டுப்பட்ட டொமினியன் பதவியை இந்தியாவிற்கு யுத்தம் முடிவானவுடன் காலதாமத மன்னியில் கூடிய சிக்கிரத்தில் அளிக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார். ஆனால் இந்த அடையசில நிபந்தனைகளையும் ஏற்படுத்தியிருக்கிறார். எல்லோரும் பல ஜாதிகளும், ஒன்றுசேர்ந்து 40 கோடியும் ஒரே நடையில்வர வேண்டும். ஒரேகுரலில் ஏகோபித்துக் கேட்க வேண்டும். மத்திய அரசியல் சட்டசபை திட்டத்தில் பரிபூரணமான ஒற்றுமை பல ஜாதிகளுக்குள் இருக்க வேண்டும். "அப்படி ஏற்பட்டால் தான் டொமினியன் அந்தஸ்துள்ள அரசியல் ஸ்வர்க்கம் உங்களுக்கு கிடைக்கும்" என்று மொழிந்தார். இது நியாயமா, நடக்குமா? முடவனுக்கு மோக்ஷம் கொடுக்கவேண்டுமென்றால் அவனைக் கூப்பிட்டு, "அடே. நொண்டி, உனக்கு நான் ஸ்வர்கம் கொடுக்கிறேன். நிச்சயம். நீ ஒன்று மாத்திரம் செய்யவேணும். ராமேசுவரம் முதல் ரிஷிகேசம் வரையில், நீ எல்லா க்ஷேத்திரங்களையும் தரிசித்து தீர்த்தாடனம் செய்து திரும்பி இவ்விடம் வந்து என்னைக் கண்டு கொண்டால் நான் உனக்கு மோக்ஷம் கொடுக்கிறேன். நீ பூமியில் புரண்டு புரண்டு அங்கப் பிரதக்ஷணம் செய்து எழு மலையானை கூப்பிட்டு போனாலும் போதாது. ஏ நொண்டி, நீ காலால் நடந்துபோய் வரவேணும். அப்பொழுது தான் புண்ணியம். அப்பொழுதுதான் உனக்கு ஸ்வர்க்கம் நிச்சயம்" என்று சொல்வது போல் இருக்கிறது.

வகுப்புவாதங்கள், கோரைப்புல்போல் மண்டிக்கிடக்கும் நமது பாரத நாட்டில், பரிபூரண ஒற்றுமை அரசியல் விஷயங்களில் மூனே முக்கால் நாழிக்குள் ஏற்பட

வேண்டுமென்றால் எவ்விதம் கிடைக்கும். தவிர, இந்த வகுப்பு வாதங்களுக்கும், பிளவுகளுக்கும் மூலகாரணங்கள் என்ன! எது இவைகளுக்கு, காட்டாறுக்கு கரையிட்டு உயிரளிப்பதுபோல், இப்பொழுது வகுப்புவாதங்களுக்கு உயிரளித்திருக்கிறது.

1906ல் தூபதீபம் போட்டு ஆரம்பித்து, 1919 ல் பிரதிஷ்டை செய்து, கோவில் கட்டிவைக்கப்பட்டது தனித்தொகுதியாகும். இத்தனித்தொகுதி முறை தேர்தலிலிருந்து தொலையும் வரையில் நமது அரசியல் ஆலயத்தில் கடவுள் ஏது! பிசாசுதான். இந்தியாவிற்கு க்ஷேமம் ஏது? பிரிவுகளும் பிளவுகளும் அதிகரிப்பது ஆச்சரியமா? இந்தப் பேயை ஓட்டும் வழியைத் தேடாவிட்டால் நமது நாட்டில் சாந்தம் கிடையாது. முன்னேற்றம் கிடையாது. மைனாரிட்டிகளுக்கு வேண்டிய பாதகாப்புகளை நாம் எப்பொழுதும் கொடுக்க எவரும் தயாராயிருக்கிறோம். சட்டசபை தேர்தல்களில் கூட்டுத் தொகுதி (Joint Electorate) அமுலுக்கு கொண்டு வராவிட்டால் இந்திய அரசியலில் ஒருவிதமான நன்மையும் கிடைக்காது. தீங்குதான் விளையும். செயலும் எண்ணமும் நன்றாயிருந்தாலும் வேற்றுமையே அதிகரிக்கும். ஒற்றுமை அழியும். இதை நன்கு அறிந்த நாம் இனிமேல் செய்யவேண்டிய அரசியல் சட்டதிட்டங்களில் தனித்தொகுதியை ஒழித்துப் போட வேண்டும்.

அரசியலில் பரிபூரண ஒற்றுமை எந்த நாட்டிலாவது எக்காலத்திலாவது வழங்கினது உண்டா? வைஸ்ராயின் பிரசங்கத்தின் கருத்து எப்படி இருக்கிறதென்றால் "எனக்கு நீ கலெக்டர் வேலை செய்து கொடு. நான் உனக்கு நிச்சயம் கர்ணம் வேலை செய்து கொடுக்கிறேன்," என்பது போலிருக்கிறது. வைஸ்ராய் எதிர்பார்க்கும் ஒற்றுமை அரசியலில் நமது நாட்டில் பிறந்து உலவுமானால் பிரிட்டிஷ் சர்க்காரிடமிருந்து நமக்கு டொமினியன் அந்தஸ்து கிடைக்க வேணுமென்று நாம் மனுப்போட்டு, கேட்டுக்கொள்வானேன். பழுத்த பழம் பூமியில் விழுவதுபோல் தானாகவே கிடைக்காதா? வேரில் பசுமையிருந்தால் சூரியனைக் கண்டதும் துளிர் தானே வெளிவராதா?

மத்திய சர்க்காரில் சுயேச்சையில்லாமல் மாகாணங்களில் எவ்வளவு சுயராஜ்யம் ஏற்பட்டாலும் முடிவில் ஜனங்களுக்கு பயன் ஏற்படாது. அன்னியர் நிலத்தில் எருப்போட்டு பாடுபட்டு சாகுபடி பண்ணினால் மகசூல் பாடுபட்டவனுடையதாகுமோ? அவனுக்கு ஏற்பட்ட அடிமை வாரந்தானே கிடைக்கும். ஆகையால் மத்திய சர்க்காரில் யுத்தம் தீருமுன்னே சுயாட்சி அவசியம் ஏற்பட வேண்டும்.

யுத்தம் முடிவிற்குப் பிந்திதான் இந்திய அரசியல் சட்ட திட்டத்தில் கைவைத்து டொமினியின் பதவியை ஏற்படுத்த வேண்டுமென்று வைஸ்ராய் கருதினால், இந்த மகா யுத்தத்தை சீக்கிரம் முடிவிற்கு கொண்டு வந்து அதில் வெற்றியடையும் வழியில்லை.

உண்மையில் இந்தியா முன்னேற்ற மடைந்து உலக ஜனநாயகத்தில் கைகலந்து உழைக்க வேண்டுமென்று எண்ணினால் வழி ஒரேவழிதான். வைஸ்ராய் தன் ஆதரவிலேயே காங்கிரஸ் காரியக் கமிட்டி திட்டம் போட்டிருக்கிறபடி சீக்கிரத்தில் ஓர் அரசியல் நிர்ணய சபையை தனித் தொகுதியன்னியில் கூட்டு முறையில் தேர்தல் வைத்து கூட்ட வேண்டிய தவசியம். அந்த சபையைக் கூட்டி திறக்கும் விழாவன்று "நீங்கள் இந்தியாவிற்கு எப்படி ஓர் அரசியல் திட்டம் போடுகிறீர்களோ, அதை நாங்கள் உடனே பார்லிமெண்ட் மூலமாக அங்கீகரிக்கிறோம்" என்று வைஸ்ராய் கூற வேண்டியது அவசியம். இதனால் ஆங்கிலேயர்கள், தாங்கள் 100 வருஷகாலமாக உழைத்து இந்தியாவிலே போட்டிருக்கும் பொருள்களுக்கும், திரவியத்திற்கும், வருங்கால லாபத்திற்கும் நஷ்டம் ஏற்படுமென்று எண்ண வேண்டாம். பயமடைய வேண்டாம்.

ஆசிரியருக்குக் கடிதம்

காளிதாஸனில் 'கைவைத்தல்'

ஐயா,

திருச்சி ஆகாசவாணியின் மூலம் இந்த மாதம் ஸம்ஸ்க்ருதாபிமானிகளுக்குக் காளிதாஸ மகா கவியின் அபிக்ஞான சாகுந்தல நாடகத்தின் நான்காவது அங்கத்தைக் கேட்டு ஆனந்திக்கும் அதிர்ஷ்டம் கிடைத்தது. ஸம்ஸ்க்ருதத்தை கையாளுவதில் திருச்சி நிலயத்திற்கு இது முதல் முயற்சி யாதலால் இதிலிருந்த சிறு பிழைகளை பொருட்படுத்தாது, இம் முயற்சி நன்றாகவே இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனாலும் ஒரு பிழையை மட்டும் எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது. இந்த சகுந்தலை புக்ககம் போகும் கட்டத்தை ஆகாச வாணிக்குத் தயார் செய்தவர், காளிதாஸன் ஐந்தாவது அங்கத்தில் துஷ்யந்தனுடைய நிலையைக் குறிக்க எழுதிய சுலோகம் ஒன்றை நான்காவது அங்கத்தில் சகுந்தலையின் வாயில் திணித்தது மிகவும் தவறு. அந்த சுலோகம் எந்த ஸந்தர்ப்பம், என்ன பொருள் கொண்டதென்று ஆராய்ந்தவர் இப்படி அச் சுலோகத்தைப் புகுத்தியதை ஒப்புக்கொள்ள முடியாது.

இனி நடக்கும் காளிதாஸத் துணுக்குகளிலோ, இதர ஸம்ஸ்க்ருதத் துணுக்குகளிலோ, இம்மாதிரிக் 'கை வைத்தலை'ச் செய்யாமல் உண்மைக் காளிதாஸனையே அறிந்தவர் தம் சுவை புணர்ச்சி புண்படாது சுவைக்கும்படி திருச்சி ஆகாச வாணியார் உதவுவர் என்று நம்புகிறேன்.

காளிதாஸ தாஸன்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

இப்படிபட்ட உயர்ந்த நோக்கத்துடன் இந்தியாவை பிரிட்டிஷ் சர்க்கார் இந்த நெருக்கடியில் ஆதரித்தால் நியாயத்திற்கு நியாயம்; வருங்காலத்திற்கு க்ஷேமம்; எல்லா ஜனங்களுக்கும் சுபம். உலகம் முழுவதும் மறுபடியும் ஜன நாயகம் தலையோங்கி மேன்மையடைந்து வரும். பிரிட்டிஷ் ஜனங்களுக்கு இவ்விதம் இந்தியாவை உயர்தரமாய் நடத்த வேண்டுமென்ற எண்ண மிருந்தாலும், தற்காலம் அரசாட்சி புரிந்துவரும் பிரிட்டிஷ் மந்திரி சபைக்கு இவ்வளவு உன்னதமான புத்தியும், மனோ விசாலமும் உண்டாவென்று எனக்கு ஐயமுண்டு. ஈசன் செயல்.

கே. எஸ். வேங்கடரமணி.

டாக்டர் ரங்காச்சாரி

டாக்டர் ரங்காச்சாரியைப்பற்றி எழுதப்பட்ட இதுபோன்ற திருப்திக் குறிப்புகளுக்கு முன்னுரை எழுத ஒரு விதமான யோக்யதையும் எனக்கு இல்லாவிட்டாலும், என் நண்பர் சித்தூர் ராஜகோபாலாச்சாரியாரால் தூண்டப்பட்ட எனக்கு இக் கடமையைச் செய்யவேண்டியது அவசியமாயிற்று.

தென்னிந்தியாவில் இந்நூற்றாண்டின் பொறுக்கு மணிகளில் டாக்டர் ரங்காச்சாரி ஒன்று. தன் வேலைச் சிறப்பிலும் சமூகத் தொண்டுபுரியும் மனப்பான்மையிலும் டாக்டர் ரங்கார்ச்சாரி சிறந்தவராக விளங்கினார். அவர் வாழ்க்கை ஓர் உண்மை 'யோக'மாக இருந்தது. சமூகத் தொண்டுக்குத் தன்னை தத்தம் செய்துகொண்டார். வியாதிகளை சமிக்கும் கலைக்கே அவர் வேலை செய்தார். அவர் வகித்த உன்னத பதவிக்குக் காரணம் காருண்ய மனப்பான்மையுடன் அவர் தன் கடமையை சமூகத்துக்கு செய்து வந்ததுதான். வைத்தியத் தொழில் அவரை ஜெயிக்கவில்லை. ஆனால் தொழிலை அவர் ஜெயித்தார்.

வியாதியஸ்தர்களோடு தன்னையும் ஒருவனாக எண்ணி நடந்துகொண்டார். அதனால்தான் ஓர் சிறந்த வைத்தியனாக விளங்கினார். தன்னிடம் வந்த வியாதியஸ்தர்கள் வேறு தான் வேறு என்ற எண்ணம் அவரிடம் இருக்கவில்லை. வியாதியைத் தீர்க்கும் சக்தி கடவுளின் அருள் போல் அவருக்கு வந்தது. மனிதனையும் அவன் தொழிலையும் ஆசீர்வதிக்கும் உண்மை தபஸ் அத்தன்மையான ஆத்ம தத்தத்தில்தான் அடங்கி இருக்கிறது.

சுவேதாரண்ய ஆசிரமம்,
மைலாப்பூர்.
ஜனவரி 11௨, '37

டாக்டர் ரங்காச்சாரி வாழ்க்கையிலும் அறிவிலும் உத்தம புருஷனாக இருந்தார். ஒருவனை மற்றொருவன் ஆதரிக்கும் சக்தி அறிவாளியாக மாத்திரம் இருந்தாலும் வருவதில்லை. ஆனால் அப்பேற்பட்ட சக்தி அவரிடமிருந்தது என்று எனக்குத் தோன்றிற்று. அவர் படிப்பை வாழ்க்கை நிறப்பிற்று. வாழ்க்கையைக் கண்காணிக்கும் சக்தியை, புத்தகங்கள் விருத்தி செய்தன. ஆனால் இவ்வரிய புதையல்கள் போன்ற நற்குணங்களை அவர், தன்னிடம் அதிக பரிசயமுள்ள சிலருக்கேதான் காண்பித்தார். அவர் மேதை தொழிலைப் பின்பற்றிச் செல்லும் வேட்டையில் நுண்ணறிவின் நிலைக்கும் மேல் வெகு உயரத்தில் அலைந்து திரிந்து பலன் பெற்றது.

தன்னலமின்றி உண்மை கீதை முறையில், தொண்டு புரிந்தார். இது போன்ற பன்னிரெண்டு மனிதர்கள் மனித வாழ்க்கையின் ஒவ்வொரு பிரிவிலும் இருந்துவிட்டால் உண்மை சுயராஜ்யம் இந்தியாவினுடையது மாத்திரமல்லாது உலகத்துக்கே சொந்தமானதாகும். தமிழர்களான நாம் இந்த உத்தம புருஷன் ஞாபகார்த்தமாக பூரண திருப்தியளிக்கும்படி ஏதாவது ஒன்று செய்து வைக்க வேண்டும். இப்பொழுது செய்தது போதாது. நம் உத்தம புருஷர்களை நாம் கௌரவிக்கக் கற்றுக்கொண்ட அன்றே நம்மை விட்டு அடிமை நீங்கிவிடும். அம் மகாபுருஷர்களின் ஞாபகார்த்தமாக செய்யப்பட்ட வேலைகள், பின் வரும் பல தலைமுறைகளுக்கு, அவ்வித சிறந்த தொண்டை செய்யத் தூண்டும் சிறந்த சாதனமாக இருக்கும்.

கே. எஸ். வேங்கடரமணி.

டாக்டர் ரங்காச்சாரி நினைவுப் பிரசுரம் "இன்மெமோரியம்" என்பதில் எழுதப்பட்ட முன்னுரையின் மொழி பெயர்ப்பு.

உலக வர்த்தமானம்

1939 வெகு மனவருத்தத்துடன் கண்ணில் தண்ணீர் ததும்பப் "போய் வருகிறேன்" என்றுகூடச் சொல்லாமல் போய்விட்டது. 1940-வது சந்தோஷமாகப் போகுமா என்று ஏங்குகிறார்கள் உலகெங்கும்.

சண்டையோ நின்றபாடில்லை; நடந்தபாடுமில்லை. "நோகாமல் அடிக்கிறேன், நீ ஓயாமல் அழு" என்கிற கதையாக ஐரோப்பாவில் நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன. ஹிட்லரும் ஸ்டாலினும் சேர்ந்து போலந்தை பங்கிட்டுக் கொண்டார்கள். ஸ்டாலினை வாயாரா வாழ்த்தாத குத்தத்தில் பிரிட்டிஷ் சிங்கம் ஹிட்லருடன் சண்டை செய்கிறது. மேற்கு முனையில்தான் சண்டை நடக்கிறது என்று வரும் செய்திகள் அறைகூவுகின்றன. ஆனல் உண்மையில் யுத்தம் என்பது பொருளாதார முறையில்தான் நடத்தப்படுகிறது என்று தெரிகிறது. பிரிட்டன் தனக்கு விசாலமான சாம்ராஜ்யமிருப்பதைக் கொண்டு பொருளாதார முறையில் (Economic Blockade) ஹிட்லரை ஒழிக்க முயலுகிறது.

வெகு யுக்தியுடன்தான் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் யுத்தத்தை நடத்துகிறார்களாம். ஜெர்மன் விமானங்கள் இங்கிலாந்தில் குண்டு வீழ்த்துகின்றனவாம். அதற்குப் பதில் அஹிம்ஸா முறையிலோ என்னவோ, பிரிட்டிஷ் விமானங்கள் ஜெர்மனியில் நோட்டீசுகளை வீசி எறிகின்றனவாம். "கடைசி பிரெஞ்சுக்காரன் வரையில் பிரிட்டன் யுத்தம் செய்யும் என்று" யாரோ சொல்லுவது உண்மைதான் போலிருக்கிறது.

ரஷ்யா பால்டிக் பிரதேசங்களை ஒரு கை பார்க்க ஆரம்பித்து விட்டது. பின்லாந்தை விமானங்களால் த்வம்ஸம் செய்கிறதாம். பாவம்! பின்னிஷ் மக்கள் உயிருக்கு மன்றாடுகிறார்கள். முஸோலினி திகைக்கிறார். ஹிட்லர் முழிக்கிறார். பின்லாந்தைக் கபளீகரம் செய்து விட்டு ரஷ்யா சமாதானத்துக்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது ஹிட்லர் பிரார்த்தனை போலிருக்கிறது!

இந்திய மக்களின் சுதந்திரப் போர் வெகு தீவிரமாக நடந்து வருகிறது. டில்லியிலிருந்து வார்தா, வார்தாவிலிருந்து பம்பாய், மதராஸிலிருந்து டில்லி, இப்படியாக தலைவர்கள் பிரயாணக் கஷ்டங்களையும் பார்க்காமல் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

ஜின்னாவுந் தான் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறார் முஸ்லிம் லீகின் அபி விருத்திக்கு. "ஹாய்யாக காங்கிரஸ் மந்திரி சபை ஒழிந்தது" என்று கொண்டாடும்படி ஒரு நாளைக் குறித்துக் கொடுத்தார். பாவம் ஏமாந்து போனார். இனி என்ன செய்வதென்பது தெரியாமல் யோசிக்கிறார் போலும்! எல்லா மைனாரிட்டி கோஷ்டியினரும் ஒன்று சேர்ந்து காங்கிரஸாரால் முடியாமல் போனாலும், தாங்களாவது பிரயத்தனப்படுகின்றார் இந்திய சுதந்திரத்துக்கு. தமிழ் நாட்டுப் பெரியார்கூட பம்பாய் போய் வந்தாராம்.

வைஸ்ராயும் சிறிது சிறிதாக சுதந்திரப் போர் செய்ய இந்திய மக்களின் சக்தி அதிகரிப்பதை தெரிந்து கொள்ளுகிறார். இப்பொழுதுதான் கொஞ்சம் வழிக்கு வருகிறாப்போல் பாவனை செய்கிறார். ஆனாலும் எப்படி நம்புவது?

சென்ற வாரத்தில் வைஸ்ராய் அபிப்பிராயம் இந்தியாவில் கிளர்ச்சியை யுண்டு பண்ணி இருக்கிறது. சிலர் திருப்தியடைகிறார்கள் அதைக் கண்டு. சிலர் சந்தேகமும் கொள்கிறார்கள். ஆனல் காங்கிரஸ் கவனித்துக் கொண்டுதான் வருகிறது என்று தோன்றுகிறது.

எதற்கும் மகாத்மா காந்தியின் அபிப்பிராயம் முக்கியமானதல்லவா? அவர் "சர்க்காரை விடாதீர்கள்" என்று கூவிக் கொண்டிருக்கிறார் வார்தாவிலிருந்து. "சர்க்காரே நமக்கு சுயராஜ்யத்தை யளிக்கும்" என்று தீரமாக உரைக்கிறார்.

இது தெரியுமா?

இந்தியாவில் கல்வி அபிவிருத்தி சென்னை அதிகமாகச் செலவழிக்கிறது

1937-38 வருஷங்களில் எல்லா மாகாணத்தையும்விட பம்பாயில் அதிகமாக பிள்ளைகளும் பெண்களும் பாடசாலைகளில் படித்தார்கள். அந்த வருஷத்தில், ரிஜிஸ்தர் செய்யப்பட்ட பாடசாலைகளில் படிப்பவர்களின் சதவிகிதம் 7·83. அடுத்தபடி சென்னை மாகாணம் 7·3 சதவிகிதம். மத்திய மாகாணத்திலும் பீராரிலும் மிகக் குறைவு 3·31 சதவிகிதம்தான்.

வங்காள மாகாணத்தில் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பெண் பிள்ளைகள் எண்ணிக்கை மற்ற மாகாணங்களிலுள்ளவைகளைக் காட்டிலும் அதிகம். 6·61 சதவிகிதம். ஆனால் புருஷர்களில் பெண்கள் படித்தவர்கள் 9·91 சதவிகிதம்தான். ஆனால் பம்பாயில்தான் ஆண் பிள்ளைகள் அதிகமாகப் படித்தார்கள். 11·06 சதவிகிதம்· சென்னையில் 10·2 சதவிகிதம் ஆண் பிள்ளைகளும், 4·2 சதவிகிதம் பெண் பிள்ளைகளும் பள்ளிக்கூடங்களில் படித்தார்கள். மத்திய மாகாணமும், பீராரும் பட்டியில் கடைசியாக வருகின்றன ஆண் பிள்ளைகள் 5·21 சதவிகிதம் பெண்கள் 1·12 சதவிகிதம்.

சென்னை மாகாணம்தான் அதிகமாக கல்வி அபிவிருத்திக்கு செலவழிக்கிறது ரூ 5½ கோடிக்குமேல், அடுத்தபடியாக வங்காளம் ரூ. 5 கோடி; வடமேற்கு மாகாணமும், எல்லைப்புற மாகாணமும் வெகு குறைவாக செலவு செய்திருக்கின்றன—ரூ. 31 லக்ஷம்

இந்தியா மொத்தத்திற்கும் மொத்த ஜனத்தொகையில் 5 38 சதவிகிதம்தான் ஆண்களும் பெண்களும் பள்ளிக்கூடங்களில் படித்தார்கள்.—பிள்ளைகள் 7·87 சதவிகிதமும் பெண்கள் 2·31 சதவிகிதமும்.

1937-38 ல் இந்தியா கல்வி அபிவிருத்திக்காக ரூ. 27 கோடி செலவு செய்திருக்கிறது. ஆனால் முன் வருஷத்தில் செலவழித்தது. ரூ. 28 கோடி (1937 ல் பர்மா பிரிக்கப்பட்டதைக் கவனிக்க வேண்டும்.) 1936-37 ல் இந்தியாவில் கலாசாலைகளின் எண்ணிக்கை 241. 1937-38 ல் 246 ஆக அதிகரித்தது. ஆரம்ப பாடசாலைகள் எண்ணிக்கை 164, 894 லிருந்து 158, 602 ஆகக் குறைந்துவிட்டது.

* * *

மைசூர் குடிசைத்தொழில்

ஆடு விருத்தி செய்தல்:—மைசூரில் 28,00 000 ஆடுகள் இருக்கின்றன; அவை முக்கியமாக எருவும் தோலும்தான் கொடுக்கின்றன. ரோமம் அதிகமாகக் கிடைக்கிறதில்லை.

எல்லாச் செஹெல்லி ஆட்டுப் பண்ணையில் சர்க்கார் ஆடு அபிவிருத்தியைப்பற்றி முயற்சி எடுத்துக் கொண்டார்கள் இந்திய சர்க்காரின் மிருகப் பாதுகாப்பு நிபுணர் ஸ்ரீ. கெர் அங்கு செய்யப்பட்ட வேலைகளைப்பற்றி புகழ்ந்து பேசினர். கம்பளி உற்பத்தியையும் அதிகமாக்க முடியுமா என்று பரிசோதித்துப் பார்க்கும்படி தூண்டினர்.

* * *

விவசாயப்பண்ணை

ஹெப்பால் பண்ணை:—21 ஏகர் புஞ்சை 9 ஏகர் நஞ்சை, இத்துடன்தான் இந்திய கவர்ன்மெண்டின் விவசாய நிபுணர் போதனையின் பேரில் ஹெப்பால் விவசாயப் பண்ணை, 1905 ல். தொடங்கப்பட்டது.

இன்று ஹெப்பால் பண்ணை புஞ்சை 180 ஏகர், நஞ்சை 17 ஏகர்; 18 ஏகர் புல்தரை; 12 ஏகர் பயிர் செய்யத் தகுந்த கரம்பு நிலம்.

சாஸ்திர முறையில் வேலை செய்யப்பட்டு வருகிறது. சோளம், கம்பு, நிலக்கடலை முதலிய பலவற்றின் உற்பத்திக்கு பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மிகக்கேவலமான ஒரு கரம்பு நிலத்தில் நேபியர் புல் பயிர் செய்யப்பட்டு வருகிறது. அப்புல் இந்தியா முழுவதும் புதிதாகக் கருதப்பட்டு வருகிறது. சமஸ்தானம் முழுவதும் இப் புல்லின் விதைகள் பரவ ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

ரஷ்ய வெளிநாட்டுக் கொள்கை

(ஏ. ஜி. வேங்கடாச்சாரி, பி.ஏ.)

1

சென்ற ஆகஸ்டில் ஜெர்மனியுடன் ரஷ்யா அனுக்ரமிப்பு உடன்படிக்கையைச் செய்துகொண்டது முதல், அந்நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை பலருக்கு பெரிய புதிராயிருக்கிறது. "ஸ்டாலின் ஹிட்லரின் பங்காளி" "ஸோவியத் ஏகாதிபத்தியம் ஆரம்பமாய் விட்டது" "ரஷ்யா மோசமான ஆக்கிரமிப்புக் குற்றங்களைச் செய்திருக்கிறது" இவை போன்ற அபிப்பிராயங்கள் ஆங்காங்கு கூறப்படுவதைக் காணலாம். நம் நாட்டிலும் இத்தகைய கருத்துகள் பரவியிருக்கின்றன. ஆனல், இவை எவ்வளவு தூரம் உண்மையில் வேரூன்றியிருக்கின்றன, இந்த அபிப்பிராயங்களை சரியான ஆராய்ச்சிகளின் முடிவுகள் ஆதரிக்கின்றனவா, இந்த இரண்டு கேள்விகளுக்கும் பதிலளிக்க இங்கு முயற்சிக்கிறேன்.

போலந்தில் ஒரு பாகத்தை ரஷ்யா ஒரு குண்டு கூடச் சுடாமலேயே பிடித்துக் கொண்டது. பின்லாந்து மீது படையெடுத்துப் போரிட்டு வருகிறது. இந்த இரண்டு நிகழ்ச்சிகளும், சாதாரண ராஜீய பரிபாஷையில ஆக்ரமிப்புகள் தான். ஆனல், அவை உண்மையிலேயே சோவியத் ரஷ்யாவின் தற்காப்பை உத்தேசித்து எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் என்று மாஸ்கோவின் கொள்கையை அனுதாபத்துடன் ஆழ்ந்து கவனித்து வந்திருப்பவர்கள் கூறுகின்றனர். இந்தக் கூற்று நியாயமாகுமா? இதற்கு விடை, ரஷ்யாவின் வெளிநாட்டுக் கொள்கையை சரித்திர பூர்வமாய் ஆராய்ந்தால்தான் கிடைக்கும்.

சோவியத் ரஷ்யா மீது போர்

சென்ற மகாயுத்தத்தினல் ஏற்பட்ட அளவற்ற கஷ்ட நஷ்டங்களின் காரணமாக, ரஷ்ய மக்களைப்போலவே, மற்ற ஐரோப்பிய தேசங்களின் மக்களும் புரட்சி செய்து, தத்தம் தேசங்களில் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வார்களென்று லெனினும் அவருடைய சகாக்களும் எதிர்பார்த்தனர். ஆனல் நிகழ்ச்சிகள் அதற்கு நேர்மாருகப் போயின. ரஷ்யாவுக்கு வெளியே சோவியத் சர்க்கார்கள் ஏற்பட்டது ஹங்கேரியிலும் பின்லாந்திலுந்தான். ஜெர்மனியை முறியடித்துவிட்ட நேச தேசங்கள், முதலில் கவனம் செலுத்தியது ரஷ்யாவில் ஏற்பட்டிருந்த போல்ஷிவிக் ஆதிக்கத்தைக் கவிழ்த்து விடுவதில் தான். அப்பொழுதுதான் ஸ்தாபிக்கப்பட்ட, வேரூன்ருத போல்ஷிவிச் சர்க்காருக்கு எதிராக உள்நாட்டிலுள்ள பரசிரம் ஜீவிகளின் கோஷ்டியினர் கலகம் செய்தனர். அதை அனுகூலமாக உபயோகித்துக்கொண்டு நேச தேசங்களெல்லாம் ராணுவ பலத்துடன் குறுக்கிட்டு பாட்டாளி மக்களின் முதல் சர்க்காரை அழித்துவிடப் பார்த்தன. பின்லாந்திலும் ஹங்கேரியிலுமிருந்த சோவியத் சர்க்கார்கள் பலாத்காரமாய் களையப்பட்டன. புதிதாக சிருஷ்டிக்கப்பட்ட போலந்தும் ரஷ்யாமீது தொடரப்பட்ட யுத்தத்தில் தீவிர பங்கெடுத்துக்கொண்டு ரஷ்ய மக்கள் அதிகமாய் வசித்துவந்த வைட் ரஷ்யா, மேற்கு உக்ரேன் இரண்டையும் ஆக்கிரமித்துக்கொண்டது. ருமேனியா பெஸ்ஸரேபியா என்ற ரஷ்ய மாகாணத்தைப் பிடித்துக்கொண்டது. லிதுவேனியா, லாட்வியா, எஸ்தோனியா, பின்லாந்து-நான்கும் (பழைய ஜாரிஸ்ட் ரஷ்யாவைச் சேர்ந்தவை) முன்னரே சுதந்திர நாடுகளென அறிவிக்கப்பட்டன. 1919 வரை நடைபெற்ற இந்த யுத்தங்கள் வெற்றிபெறவில்லை. சோவியத் சர்க்காரும், தங்கள் புதிய சமுதாயம் நிலைப்பதற்காக வேண்டி, சமாதானத்தை முதன்மையாக விரும்பினர். சோஷலிஸ்ட் சமூக நிர்

மாணத்துக்கு, சமாதான நிலைமை இன்றியமையாதது. எனவே பழைய ரஷ்யாவிலிருந்து புதிதாக சிருஷ்டிக்கப்பட்ட தேசங்களுடனும், போலந்துடனும், ருமேனியாவுடனும் அவர்கள் அனுக்ரமிப்பு உடன்படிக்கை செய்துகொண்டனர். பிறகு துருக்கியுடன் இத்தகைய உறவு ஏற்பட்டது. இவ்வாறாக சோவியத் சர்க்கார் செய்த முதல் காரியம், தங்கள் எல்லைக்கு அடுத்தாற்போலுள்ள தேசங்களுடன், நம்பிக்கையைத் தரும் சௌஜன்ய உறவை ஏற்படுத்திக்கொண்டது தான்.

வல்லரசுகள் குறுக்கிட்டு நடத்திய போரிலிருந்தும், உலகின் மற்ற பாகங்களில் அவர்கள் நடந்துகொண்ட விதத்திலிருந்தும், ரஷ்யாவை தலைமை வகித்து நடத்திவந்தோர்—முக்கியமாக ஸ்டாலின் கோஷ்டியினர்—ஒரு படிப்பினையைத் தெரிந்து கொண்டனர். அதுவே, ரஷ்யாவின் கொள்கையை வெகுதூரம் உருவாக்கியது. உலகமெங்குமுள்ள பாட்டாளி மக்களை ஒன்றுபடுத்தி, ஆங்காங்கு அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றும்படி செய்து, உலகமெங்குமே, உள்ளவன்—இல்லாதவன் என்ற வித்தியாஸமில்லாத ஒரு பொதுவுடைமை சமுதத்தை நிறுவுவதுதான் போல்ஷிவிக்குகளின் லட்சியம். இந்த லட்சியமுள்ளோர், உண்மையிலேயே பூகோள எல்லைகளையும் ராஜீய எல்லைகளையும் மதிக்க முடியாது. எனினும், ரஷ்ய சர்க்கார், சாத்திய சாதனங்களை உத்தேசித்து அம்மாதிரி நடந்துகொள்ள முடியவில்லை. ஒரு தொழிலாளி சர்க்கார் தோன்றியவுடனேயே, அதை முளையிலேயே கிள்ளிவிடுவதற்காக முனைந்து போர் தொடுத்த முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகள், ரஷ்ய சர்க்கார் எங்கும் பொதுவுடைமைப் புரட்சிக்கு உழைப்பதை ஒரு நிமிஷமும் சகிக்கமாட்டார்கள். எனவே, மறுபடியும் அவர்களால் முறியடிக்கப்படாமலிருக்க வேண்டுமானால், அதற்கேற்ற நிலைமைகளை சிருஷ்டித்துக்கொள்வது அவசியமும் அவசரமுமாகும் என்பதை ரஷ்யர் உணர்ந்து கொண்டனர்.

சமாதானக் கொள்கை

அத்தகைய நிலைமைகளில் வெகு முக்கியமானது ஒன்று சமாதானத்துக்கு பங்கம் நேரிடாமல் காப்பாற்றுவது. அந்த நோக்கத்துடன்தான் அவமானகரமானதெனத் தோன்றும் உடன்படிக்கைகளையெல்லாங்கூட போல்ஷிவிக் தலைவர்கள் ஒப்புக்கொண்டு அடுத்துள்ள நாடுகளுக்கு நம்பிக்கையை உண்டுபண்ணியது. பாட்டாளி மக்கள் ஆங்காங்கு தங்களிடையே ஸ்தாபன பலத்தை ஏற்படுத்திக்கொண்டு, புரட்சிக்காக உழைக்கும் வேலையை பொதுவுடைமைக் கக்ஷி செய்து வந்தது. சீனா தவிர மற்ற தேசங்களில், வியக்தமாயுள்ள காரணங்களின் விளைவாக, இந்த இயக்கம் எதிர்பார்த்த அளவுக்குப் பயனளிக்கவில்லை. சீனாவில் போல்ஷிவிஸம் வெற்றிபெறுமெனத் தோன்றியது. 1927-ல் அப்பொழுது பிரிட்டன்போன்ற வல்லரசுகள் ராணுவ பலத்துடன் பொதுவுடைமைக்காரரை எதிர்த்துப் போரிட்டு, தங்களது நம்பிக்கைக்குப் பாத்திரமான சியாங்-கே-ஷேக்கை பதவிக்குக் கொண்டு வந்தது.

ஆயுதப் பரிஹரணம்.

அப்பொழுது, சன்மார்க்கத்திலும் நியாயத்திலும் நம்பிக்கை அடியோடு மறையவில்லை. ஸர்வதேச ஆயுதப் பரிகரண மகாநாடு அவ்வருஷம் கூடியது. ஸர்வதேச சங்கம், முதலாளித்துவத்தை நிலைநாட்ட ஏற்பட்ட ஸ்தாபனமெனக் கருதி ரஷ்யா அதில் சேராதிருந்ததாயினும், ஆயுதப் பரிகரண மகாநாட்டில் கலந்துகொண்டது. உலகின் ஒரு மூலையில் சமாதானத்துக்கு பங்கமேற்பட்டாலும் அது வியாபித்துவிடும் என்பதை நன்குணர்ந்த ரஷ்யப் பிரதிநிதி எம். லித்வினவ் "சமாதானம் பிரித்து வைக்க முடியாதது." (Indivisibility of Peace) என்ற கருத்தைப் பிரபலமாக்கினர். அதையனுசரித்து, எல்லா தேசங்களும், தம் உள்நாட்டு போலீஸ் பந்தோபஸ்துக்கு வேண்டியவை தவிர அதிகப்படியாக படைகளை வைத்துக் கொள்ளக் கூடாதென்றார். இந்த யோசனை

மற்ற பிரதிநிதிகளை திடுக்கிடச் செய்தது. உலகமெல்லாம் ஆயுதப்பரிகாரணம் செய்யச் சொல்லி ரஷ்யா, தான் மட்டும் எல்லா விடங்களிலும் குறுக்கிட்டு பொதுவுடைமைப் புரட்சியை ஏற்படுத்த இதன் மூலம் சூழ்ச்சி செய்வதாக சாக்குச் சொல்லி இந்த யோசனையை கவனிக்கவேயில்லை. 1931-ல் மஞ்சூரியாவை ஜப்பான் அபகரித்து, கீழ்க் கோடியில் உலக யுத்தத்தை விளைவிக்குந் தருவாயில் இருந்தது. ஆனால், சமாதான நாட்டமுள்ள ரஷ்யா, ஜப்பானுடன் அனுக்ரமிப்பு ஒப்பந்தம் செய்யத் தயாரென்று சொல்லி, தனக்கும் ஜப்பானுக்கும் தகராறை விளைவிக்கக்கூடிய சீன கிழக்கு ரயில்வேயை ஜப்பானுக்கே மலிவாக விற்று விட்டது. அந்தக் கடன் பாக்கியின் கடைசி தவணை இம்மாதந்தான் கொடுக்கப்பட்டது.

'ஒரு நாட்டில் சோஷலிஸம்'

சீன அனுபவத்தின் விளைவாக, ரஷ்யா தன் கொள்கையை மாற்றிக்கொண்டது. ரஷ்ய சர்க்கார் சோஷலிஸத்தை வெற்றிகரமாக ரஷ்யாவில் ஏற்படுத்துவதில் முதன் முதலாக கவனம் செலுத்தவேண்டும். அதை வெற்றிகரமாக நடத்திக் காட்டுவதே, மற்ற தேசங்களிலுள்ள பாட்டாளி மக்களுக்குப் பெரிய உதாரணமாயிருக்கும். அவர்களும் நிதர்சனமாகத் தங்கள் கண்முன் நடப்பதைக்கண்டு, அத்தகைய நிலைமையைத் தங்கள் நாடுகளிலும் ஏற்படுத்த முழு மனதுடன் முன் வருவர். இதுவே ஸ்டாலின் கொள்கை. அப்படியின்றி, எல்லா தேசங்களிலும் புரட்சியை விளைவிக்க ரஷ்யா முயன்றால், ரஷ்யாவிலேயே சோஷலிஸ்ட் சமுதாயத்தை உருவாகாமல் சிதைத்துவிட மீண்டும் உலக நாடுகள் கிளம்பும். அதை ஸ்டாலின் விரும்பவில்லை. உலகமெங்குமுள்ள பொதுவுடைமைக்கக்ஷி மட்டும் பல தேசங்களிலும், சட்ட விரோதமாயிருந்தும் மும்முரமாய் வேலை செய்துவந்தது. ஆனால், ஒரு நாட்டில் சோஷலிஸ்ட் நிர்மாணம் வெற்றிகரமாய் நடைபெறுவதற்கு அது வெளியேயிருந்து பயமுறுத்தப்படாமலிருப்பது இன்றியமையாதது. எனவே, முதலாளித்துவ நாடுகளெல்லாம் பகைவர்களாகக் கூடும் என்ற எண்ணத்துடன் பிரம்மாண்டமான ஸைன்யத்தைத் திரட்டி பயிற்சி தருவதும் புதிய சமுதாய நிர்மாண வேலையில் முக்கியமான பகுதியாயிற்று. இந்த வேலையில் ரஷ்யாவுக்கு ஜெர்மனி வெகுதூரம் உதவியளித்து வந்தது. ஹிட்லருக்கு முன் ஜெர்மனியில் பதவி வகித்து வந்த சர்க்கார்களுக்கும் ரஷ்யாவுக்கும் நெருங்கிய உறவு இருந்துவந்ததால் அவையிரண்டையும் நஷ்டப்படுத்தி லாபமடைந்த தேசங்கள் அவை ஒன்று சேராமல் தடுக்கவும், அப்படிச் சேர்ந்தாலும் பழைய பிரதேசங்களைக் கேட்காமலிருக்கவும், இரண்டுக்குமிடையேயும், தென் கிழக்கு ஐரோப்பாவிலும் உள்ள நாடுகளுடன் உறவு வைத்துக்கொண்டன.

ஹிட்லரிஸத்தின் அறையல்

ஆனால், 1933ல் ஹிட்லர் ஜெர்மனியில் நாஜி ஸர்வாதிகாரத்தை ஸ்தாபித்தவுடன் பிரான்ஸ் நடுக்கமுற்றது. சர்வ தேச, ஒழுக்க முறையை பிரிட்டன் தன் சுயநலத்தின் காரணமாக நிலைநாட்ட முன்வராதென்று மஞ்சுகோ விவகாரத்திலிருந்து சந்தேகித்த பிரான்ஸ், ஜெர்மனியின் புதிய ஆபத்தை உத்தேசித்து, ரஷ்யாவுடன் பரஸ்பர உதவி உடன்படிக்கையைச் செய்துகொண்டது (1934). ரஷ்யாவும் ஸர்வதேச சங்கத்தில் சேர்ந்தது. பரஸ்பர உதவி உடன்படிக்கை நடைமுறையில் பயன்படுவதற்காக செகோஸ்லோவாகியாவுடனும் இரண்டு தேசங்களும் பரஸ்பர உதவி உடன்படிக்கை செய்துகொண்டன. பாஸிஸ்ட் இத்தாலியும் நாஜி ஜெர்மனியும் பாட்டாளி மக்களின் அபிலாஷைகளுக்கு உலைவைப்பவை யாகையாலும், பிரிட்டனும் பிரான்சும் ஜனநாயக முறைகளை அனுஷ்டித்து வந்ததாலும், உண்மையிலேயே உலக சமாதானத்துக்கு ஸர்வதேச சங்கத்தின் மூலம் பிரிட்டிஷ், பிரெஞ்சு ஒத்துழைப்புடன் பாடுபடுவது சாத்தியமென்று ரஷ்ய ராஜதந்திரிகள் நினைத்தனர்.

ஸங்கக் கோள்கை

ஸர்வதேச சங்கத்தில் ரஷ்யா அனுஷ்டித்து வந்த கொள்கை அப்பழுக்கற்றதாயிருந்தது. ஆக்கிரமிக்கப்படும் நாடுகளுக்கு, ஸர்வதேச சங்கத்தில் மெம்பர்களாயுள்ள மற்ற நாடுகளெல்லாம் சங்க உடன்படிக்கைப்படி உதவியளிக்க வேண்டியவை. அந்த நாட்டின் சார்பாகப் போருக்குப் போவதற்கு அவை கட்டுப்பட்டவை. அப்படியிருந்தும், சங்கத்தில் முக்கியமாயிருந்த பிரான்சும் பிரிட்டனும் தங்கள் சொந்த நன்மையைக் கருதி சங்க உடன்படிக்கையின் அஸ்திவாரம் போன்ற கூட்டுறவுப் பாதுகாப்பை (Collective Security) கௌரவிக்கவில்லை. 1935-ல் அபிசீனியாவை இத்தாலி சுலபமாக விழுங்கும்படி அனுமதிக்கப்பட்டதால்தான், நிர்ப்பயமாய் ஆக்கிரமிப்புகளில் இறங்கலாமென்ற துணிச்சல் ஹிட்லருக்கு வந்தது. இத்தலிமீது ராணுவ நிர்ப்பந்தங்களைப் பிரயோகிப்பதற்குத் தயாராயிருப்பதாக சங்கத்தில் கூறிய ஒரே தேசம் ரஷ்யாதான். பிறகு சீனவை ஜப்பான் தாக்க வாரம்பித்த போது, சங்க இயந்திரம் அசையவில்லை. சங்க நாடுகள் தங்களாலியன்ற உதவியை அளிக்கவேண்டுமென்று மட்டும் ஒரு தீர்மானத்தைப் பகட்டாக நிறைவேற்றி வைத்தன. பிரிட்டன் கடன் கொடுத்தது. ஆனால் ரஷ்யாதான் சீன இன்னமும் எதிர்த்து நிற்கக் கூடியவாறு, விமானங்களைக் கொடுத்துதவி, சீன சைன்யங்களுக்குப் பயிற்சி யளித்தது.

(தொடரும்)

உழவன் தோழன்
உங்கள் நேசன்

*

பாரத மணி

(வாரப் பத்திரிகை)

*

வருட சந்தா நாலே ரூபாய்தான்
இன்றே சந்தாதாரராய்ச் சேருங்கள்

க ௨

கனவொன் றுகண்டனன் சேடீ ! அதைக்
கழற நினைத்திடும் போது

எனது நெஞ்சினில் வெட்கம் கூர்
ஈட்டிபோல் தைக்கிற தம்மா !

மனதுள மர்மத்தி னுலே பாலும்
வேம்பாகி, மஞ்சமும் முள்ளாய்,

அனலென ஆயிற்றுத் தென்றல் ; இதன்
ஆழ்ந்த பொருளறி வாயோ ?

பூசுஞ் சந்தனச் சேறும் படம்
பாம்பின் விஷமெனல் ஆச்சே ! எனைத்

தனியாய் விடாதே, சேடி ! யாழ்
தருமிசை நாரா சமிப்போ !

எனது விழிவழி யோடி என்
இருதய இல்புகும் போது

நனவெனும் மறலிதான் வந்து இன்
கனவாம் உயிர்பறித் தானே

எங்குளார் ? தேடிநீ வாடி ! அவர்
இளநகை கதிரின் உதயம் !

கங்குல் நிகர்திரு மேனி ; கண்ணில்
கமழும் கருணை ஒளியே !

செங்கனி யனைய இதழில் குழல்
இன்னொலி காட்டியே வந்து

பங்கயக் கையினுற் றழுவி காதற்
பரிசாம் முத்தமொன் றீந்தே

மின்னென விழிக்கு மறைந்தார் ; எனில்
மெய்யே உயிரில் நிறைந்தார்

முன்னர் அவர்முகம் தோணும் ஆனல்
மோகச் சிரிப்பதில் இல்லை

கன்னிக் கொடிபோல் படரும் என்
கற்பெனும் கொம்பினை க்கவர்ந்து

சென்றவர் திரும்பியே வாரார் எனில்
ஜீவன் இருந்துமென் பயனே ?

கருப்பன் தீபாவளி

(எஸ். லக்ஷ்மி நாராயணன் பி. ஏ.)

இரவு மணி எட்டு இருக்கும். எங்கும் ஒரே இருட்டு. இடியும் மின்னலும் ஜனங்களைக் கலங்கச் செய்தன. மின்னல் வெளிச்சத்தில்தான், ரஸ்தாவில் நடமாடும் ஜனங்களைப் பார்க்க முடிந்தது. சில நிமிஷங்களில் இடி நிற்கவே, 'சோ'வென்று மழை கொட்டிற்று. அன்று பெய்ததுபோல் ஒரு நாளும் மழை பெய்ததில்லை. ரஸ்தாவில் இடுப்பளவு நீர் ஓடியது. ஆனால் இதற்கெல்லாம் கருப்பனா பயப்படுகிறவன்? என்றுமில்லாதபடி அவனுக்கு அன்று ஒரு அலாதி மகிழ்ச்சி. கையில் ஐந்து ரூபாய்களைக் கண்டதும் அவனுக்கு இவ்வுலகே திரண மாத்திரம் என்று தோன்றியது. நேராகக் குதித்து நடந்தான் கள்ளுக்கடையை நோக்கி. வேண்டிய அளவு கள்ளை அருந்திவிட்டு வாயில் வந்தபடி பிதற்றிக்கொண்டு, தள்ளாடித் தள்ளாடி வந்துகொண்டிருந்தான்.

சிறிது தூரத்தில் வந்துகொண்டிருந்தார் முனிசாமி அய்யர். அந்த இருட்டில் யாருக்குத்தான் பயமாயிராது. 'டக், டக்' என்று அடித்துக்கொண்டது அவர் மனம். அதற்கேற்ப, "யாரடா அவன், ஒரு கை பார்க்கிறேன். என்னைக் கேட்டுத்தான் ரயில் போகவேணும். இந்த ஊருக்கு நான் ராசான்னு தெரியாதா. ஒரே அடியில் மண்டையைப் பிளந்து போடுவேன்" என்று பிதற்றிக்கொண்டே அவர் முன் வந்து சேர்ந்தான் கருப்பன்.

அய்யருக்கு உடல் பதறியது. நாக்கு தழுதழுத்தது. தான் பல தடவைகள் கருப்பனைக் கோபித்துக்கொண்ட நினைவு வரவே, அவர் மனம் துடித்தது. இருந்தாலும் நம்ப கருப்பன் தானே என்று சிறிது தைரியத்துடன் பேச முயன்றார்; முடியவில்லை, அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டார்.

"நான் யார் தெரியுமா. ஜாக்கிரதை. நம்ம எசமான்னு விட்டுப்பூடுவேனு. போ, சாமி, மாடன் வரட்டும்", என்று பிதற்றிக்கொண்டே நல்ல வேளையாகச் சென்றான் கருப்பன்.

"அப்பா யார் முகத்திலே முழிச்ச புண்ணியமோ நாம் இன்று தப்பினேம்" என்று நினைத்துக்கொண்டே நடந்து சென்று வீட்டையடைந்தார், அவர்.

கருப்பனும் சரியாக பத்துமணிக்கெல்லாம் தன் குடிசைக்குள் புகுந்தான். அந்தோ ஈரத்தரையில், கால்வயிற்றுக் கஞ்சிகூடக் குடியாமல் பசியால் வாடித் தூங்கிக்கொண்டிருந்தன, அவன் குழந்தைகள். ஒரு பக்கத்தில் தேங்கியிருந்த நீரை இரைத்துக் கொண்டிருந்தாள் அவன் மனைவி.

எதிர்பாராத மழையால், அவள் அன்று, ரயிலடிக்குச் செல்லவில்லை. மாதாமாதம் தான் போய் ஐயரிடம் முறையிட்டு கருப்பன் சம்பளத்தில் நாலு ரூபாய் பெற்று அதைக்கொண்டு குடும்பத்தை காப்பாற்றி வந்தாள் அவள். ஆனால் அன்றோ ஒரு காசுகூடப் பெற்றாளில்லை. இம்மாதம் பட்டினிதான் என்று எண்ணிக்கொண்டிருக்கும் சமயத்தில்தான், வாயில் வந்தபடி பிதற்றிக்கொண்டு குடிசைக்குள் நுழைந்தான் கருப்பன்.

மறுநாள் வழக்கம்போல கருப்பன் தோட்டி வேலைக்குச் சென்றான். மூக்கியும் வயலில் களை பிடுங்கி கூலி சம்பாதிக்கச் சென்றாள்.

மணி பதினொன்று இருக்கும். அரைப் படி அரிசிக் குறுணையுடன் தன் குடிசையடைந்தாள் மூக்கி. சிறிதுநேரத்திற்கெல்லாம் அடுப்பில் கஞ்சி கொதித்துக் கொண்டிருந்தது. அம்மா பசிக்குது என்று அழுதுகொண்டிருந்த குழந்தைகள், பானையில் கஞ்சியைக் கண்டதும், களிப்புடன் அங்கு மிங்கும் ஓடிக்கொண்டிருந்தன. திடீரென கருப்பனைக் கண்ட அக்குழந்தைகள், 'ஐயா ஐயா' என்று சொல்லிக்கொண்டு

குடிசைக்குள் ஓடின. அடுத்த நிமிஷம் கருப்பனைக் கண்ட மூக்கிக்கு தூக்கி வாரிப்போட்டது. ஒருநாளும் அவ்வேளையில் கருப்பன் வந்ததில்லை.

கருப்பன் முகத்தில் ஈ ஆடவில்லை. "மூக்கி, எனக்கு வேலை பூட்டுது," என்றான். அவ்வார்த்தைகள் வயிற்றில் தீயிட்டது போன்றிருந்தது அவளுக்கு.

"என்ன செய்தி" என்றாள்.

"ஐயரு என்னை வேணும்னு நீக்கிட்டாரு."

"நான்தான் சொல்லிக்கிட்டிருந்தேனே அந்தக் குடி நம்ம குடியை ஒளிச்சிடும்னு. நீ கேட்டியா"

அவ்வளவுதான். கருப்பனுக்கு அடங்காக் கோபம் வந்தது. கண்கள் சிவந்தன. கீழே கிடந்த கம்பை எடுத்து, பளீர் பளீரென்று அடித்தான் மூக்கியை. அடுப்பிலிருந்த பானையை உடைத்தெறியவே கஞ்சியெல்லாம் தரையில் ஓடியது. பூனையைக்கண்ட எலிபோல், பதுங்கி, அசைவற்று பேச்சு மூச்சற்று இருந்தன அவன் குழந்தைகள்.

உண்மையில் கருப்பனுக்கு பைத்தியமே பிடித்துவிட்டது. தன் வேலை போனதும் அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. கோபமும் துக்கமும் ஒருங்கே எழுந்தன. ஒன்றும் பேசாமல் வெளியே சென்றான். அவனது கோபத்துக்கஞ்சி அவன் மனைவி மக்கள் அவனை அழைத்தார்களில்லை.

நாள்கள் கடந்தன. வாரங்கள் சென்றன. கருப்பன் திரும்பிவந்தானில்லை. தான் சம்பாதிக்கும் இரண்டு அணாவைக் கொண்டு தன் குடும்பத்தைக் காப்பாற்ற முடியாமல் தத்தளித்தாள் மூக்கி. பாவம் பிச்சை எடுக்கச் சென்றால், ஜனங்கள் அவளைத் தூற்றினர்களே யொழிய பிச்சையிடக் காணோம். கூலிவேலையோ தினமும் கிடைப்பதில்லை. இந் நிலைமையில்தான் தீபாவளியும் நெருங்கியது. பாவம் குழந்தைகளுக்கென்ன தெரியும். "அம்மா வேட்டி, அம்மா பண்டம் பட்டாசு" என்று முறையிட்டன. "ஐயா எல்லாம் வாங்கிவருவாரு" என்று கூறி ஏமாற்றி வந்தாள் மூக்கி.

இன்னும் இரண்டு நாட்கள் கழிந்தால் தீபாவளிப் பண்டிகை. ஆனல் இரண்டு வாரங்களாக கடைகளில் ஒரே கூட்டம். தெருக்களில் எங்கும் பட்டாசு சப்தம் காதுகளைத் துளைத்தது. வாலிபர்கள் கரகோஷத்திற்கு கேட்கவேண்டுமா, என்ன? சிரிப்பு தவழும் முகத்துடன் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தனர் சிறுவர்கள். அவர்களைக் கண்டு உள்ளப் பூரிப்படைந்தனர் பெற்றோர்கள். ஆஹா, என்ன குதூகலம்! என்னே தீபாவளியின் மகிமை!

சாயங்காலம் மணி 5-30. இருக்கும். எங்கும் ஒரே மஞ்சள் ஜோதி மயம். சூரியனும் சிறிது சிறிதாக மறைந்துகொண்டிருந்தான். 'ஜிலு ஜிலு' வென்று காற்று வீசியது. செவ்வானத்தில் சப்தித்துக்கொண்டே தங்கள் கூடுகளை நோக்கி பறந்துகொண்டிருந்தன புள்ளினங்கள். 'மா,மா', என்று கத்திக்கொண்டு வந்துகொண்டிருந்தன ஆடு மாடுகள். ஒரு புல் கட்டை சுமந்துகொண்டு, 'டிரியோ டிரியோ', என்று கத்திக் கொண்டு, மாட்டு மந்தைக்கு பின் வந்து கொண்டிருந்தான் மாடு மேய்க்கும் வெள்ளையன்.

சிறிது தூரத்தில் ஒரு கூட்டம். ஒருவனைச் சுற்றி ஏழெட்டுப் பேர் நின்றுகொண்டிருந்தனர். சீக்கிரத்தில் அக்கூட்டம் பெருகியது. 'பைத்தியம், பைத்தியம்', என்று கூக்குரலிட்டு அங்குமிங்கும் ஓடினர் சிறுவர். ஒரு சிலர் கற்களை விட்டெறிந்தனர். நல்ல வேளையாக வெள்ளையன் அங்கு வர நேர்ந்தது. அந் நேரத்தில் அங்கு கருப்பனைக் கண்ட வெள்ளையனுக்கு தூக்கி வாரிப் போட்டது. உடல் மெலிந்தது, பித்தன் போலிருந்த கருப்பனைக் கண்டதும் வெள்ளையனுக்கு வருத்தம் ஏற்பட்டது. அவ்வளவுதான். அடுத்தநிமிஷம், கருப்பன் தன் மைத்துனன் என்று மற்றவர்களுக்குகூறி அவனை அழைத்துச் சென்றான்.

வெள்ளையனுக்காக வாசலில் காத்துக் கொண்டிருந்த அவன் மனைவி மாரி, கருப்பனைக் கண்டதும் அளவிலா மகிழ்ச்சி கொண்டாள். மாரி தன் அண்ணன் கருப்பனைக் கண்டு இரண்டு வருஷங்கள் இருக்கும். கருப்பனையும் அவன் குழந்தைகளையும் அடிக்கடி நினைத்து வருந்திய மாரிக்கு அவனைக் கண்டதும் உள்ளப் பூரிப்பால் அப்படியே திகைத்து நின்றாள்.

தன் தங்கையையும், அவள் புருஷனையும் கண்ட கருப்பன் அப்படியே ஸ்தம்பித்துப் போனான். அந்த சிறிய வீடு, அவனுக்கு ஒரு மாளிகைபோல் தோன்றியது. அவர்கள் பெரிய தனவான்களாகி விட்டார்களென்றே நினைத்தான் அவன். அதே சமயம் தன் மனைவி மக்களை நினைத்ததும் கருப்பனுக்கு அவனையறியாமலே அழுகை வந்தது. தான் செய்ததைக் குறித்து வருந்தினான். சிறிது நேரத்தில் கருப்பனது நிலைமையை யறிந்தார்கள் அவர்கள். தான் பணம் தருவதாயும் ஊர் சென்று தன் மனைவி மக்களை அழைத்து வருமாறு கருப்பனை வேண்டினாள் மாரி.

அவ்வளவுதான். அடுத்த நாள் தீபாவளிக்கு வெள்ளையன் வீட்டில் பெரிய விருந்து நடந்தது. மூக்கியும் அவள் குழந்தைகளும் அளவிலா மகிழ்ச்சியடைந்தனர். குழந்தைகளுக்கு வேண்டிய பண்டமும் பட்டாசும் கிடைத்தன. மக்கட் பேறில்லாத வெள்ளையனும் மாரியும் கருப்பன் குழந்தைகளைக் கண்டு ஆனந்தம் கொண்டனர்.

"ஏ, மச்சான், இந்த ஊர்லெ இரண்டு வருஷமாச்சு கள்ளே கிடையாது; நீச்சும்மா சொல்லுறேன் மருந்துக்குக்கூட கிடையாது: என்ன பாரு, இந்த வருஷம் வேணமளெ கொட்டிச்சு. ஊரெல்லாம் செளிப்புதான்," என்றான் வெள்ளையன்.

"ஏ அண்ணே, நீ இங்கேயே குடிவந்திரு. அவுங்களெக்கொண்டு ஏதாச்சும் ஒரு வேலே வாங்கித் தாச் சொல்றேன். நம்ம மூக்கியும் குளந்தைங்களும் சவுக்கியமா இருக்கட்டுமே, என்ன சொல்றே," என்றாள் மாரி.

அவ்வூரையும் அவர்களது வாழ்க்கையையும் கண்டதுமே கருப்பனுக்கு, அங்கு பிழைக்கலாம் என்று தோன்றியது. வெள்ளையனும், கருப்பனுக்கு ஒரு வேலை தேடிக் கொடுத்தான். அன்று முதல் கருப்பனும் செழிப்புடன் வாழ்ந்து வரலாயினன். கள் வாசனையே அவனுக்கு மறந்துபோய்விட்டது. கள்ளரக்கன் அவ்வூரைவிட்டு ஓடி வருஷங்கள் சென்றன. சகல ஜனங்களும் வயிறார உண்டு களித்து வருகின்றனர். காந்திக்கு ஜே, என்ற கீதமே ஒலித்துக்கொண்டிருக்கின்றது சேலம் ஜில்லாவின் ஒவ்வொரு குக்கிராமத்திலும். என்னே அம்மக்களின் அதிர்ஷ்டம்!



தமிழ் நூல் தொகை

(த. கிருஷ்ணமூர்த்தி)

தமிழ் நூல் தொகை யொன்று தேவை என்பதை முக்கியமாக எழுத்தாளர்களும் நூலாசிரியர்களும் உணர்ந்து வருகிறார்கள். ஐரோப்பிய மொழிகளிலே அம்மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள நூல்களைக் குறித்தும், அம்மொழியிலுள்ள நூல்கள் பிற பாஷைகளில் வெளிவந்துள்ளவற்றைக் குறித்தும் அரிய பெரிய விவரப் புத்தகங்களை அந்தந்த நாட்டு மக்கள் பிரசுரித்திருக்கிறார்கள். முக்கியமாக ஆங்கில மொழியில் இருபது பாகங்களையுடைய ஒரு பெரும் நூல் ஆங்கில வெளியீடுகளைக் குறித்து வெளியிடப்பட்டிருக்கிறது. அது வெறும் பட்டியலாக வில்லாமல் அம்மொழி நூல்களைக் குறித்த வரலாறாக விருக்கிறதென்றே கூறலாம். அத்தகைய பெரும் அளவில் நம் தாய் மொழியில் வெளிப்படுத்த முடியாவிடினும் ஒரு சாதாரண விவரமானப் பட்டியலையாவது பிரசுரிக்கலாம். பல அரிய நூல்கள் அச்சுவாகனம் ஏறியிருக்கிறதா இல்லையா? பழைய பதிப்புக்குப் பிறகு சுத்த புதுப் பதிப்பு இருக்கிறதா என்பது போன்ற சந்தேகங்களுக்குப் பதிலிறுக்க அத்தகைய பட்டியல் அவசியமாகும். குறித்த ஒரு விஷயத்தைப்பற்றித் தமிழ் மொழியில் எத்தனை நூல்கள் வெளிவந்துள்ளன வென்பதும், அந்தந்த ஆசிரியர் எத்தனை நூல்களை இயற்றி யுள்ளாரென்பதும் தெரியவரும். அதனால் சில குறிப்பிட்ட விஷயங்களைக் குறித்து நூல்கள் வெளிவராதிருந்தால் அதில் பிரசுர இல்லங்களை ஈடுபடச்செய்வதற்கும் சௌகரியமாயிருக்கும். நம் தமிழ் நூல்கள் எவை எவை பிற பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன வென்பதும், பின்னும் எதனை நாம் மன்பதைக்கு அளிக்கலாமென்பதிலும் ஈடுபடச் சௌகரியமாயிருக்கும். முந்திய மொழி பெயர்ப்புகளின் உதவியினால் மேலும் சிறந்தவற்றையும் நாம் பிரசுரிக்கலாமன்றோ?

லண்டனிலுள்ள பிரிட்டிஷ் மியூசியம் அதிகாரிகள் மாத்திரமே தமிழ் நூல்களின் விபரப்பட்டிய லொன்றைப் பிரசுரித்திருக்கிறார்கள். நம் நாட்டில் பிரசுரமாகும் ஒவ்வொரு புத்தகத்திலும் ஒரு பிரதி அரசியல் சட்டப்படி அவர்கள் பெறுவதால் தங்கள் நூல் நிலையத்தில் அவைகளைச் சேமித்து வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்களுக்கு அவசியமென்றும் சிறந்தனவென்றும் தோன்றும் நூல்களையே அப் பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள். எனினும், அது மிகவும் பயன் படுகிறது. 1931ம் ஆண்டு வரை அவர்கள் பெற்றுள்ள முக்கிய நூல்களைக் கொண்ட பட்டியலொன்றை இரு பாகங்களாகப் பிரசுரித்திருக்கிறார்கள். முதல் பாகம் 1908ம் ஆண்டு வரை அவர்கள் பெற்ற நூல்களையும், இரண்டாம் பாகம் அவ்வாண்டிலிருந்து 1931ம ஆண்டுவரை பெற்றனவற்றையும் குறித்தனவாகும். முதலில் முழு விவரங்களுடன் நூலாசிரியர் தலைப்பில் நூல்கள் கோர்வை செய்யப்பட்டுள்ளன. அதில் நூல்களின் பக்கம் கொண்டுள்ள சமாசாரம் முதலியவைகளைக் குறித்து ஒரு சிறு குறிப்புமிருக்கிறது. பின்னால் நூல்களின் பெயர் அகர வரிசையாகவும் விஷயவாரியாகவும் மறுபடியும் சுருங்கிய அளவில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஒருவன் ஒரு குறிப்பிட்ட ஆசிரியரின் நூல்களை அறியவோ, அன்றி ஒரு விஷயத்தைக் குறித்துள்ள நூல்களை அறியவோ, அன்றி ஒரு நூலை அதன் பெயரால் அறியவோ வேண்டின், அப்பட்டியல் மிக உதவியாயிருக்கும். ஆனால் இப்பட்டியலில் தமிழ் மொழியில் வந்துள்ள எல்லா நூல்களுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சென்ற நூற்றாண்டில் ஜான் மார்டாக் என்ற பாதிரியார் விஷயவாரி வகுத்தப்பட்டியலொன்றை ஆங்கிலத்தில் பிரசுரித்துள்

ளார். அதுவும் இத்தகைய குறைபாட்டைக் கொண்டிருப்பதுடன், கிறிஸ்துவ சமய சார்பு கொண்டுள்ளதென்பது குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. பல பெரும் நூற்கள் அதிலும் குறிப்பிடப்படவில்லை; மியூசியப் பட்டியலிலுமில்லை. ஆகவே தமிழராகிய நாமே இதில் ஈடுபட வேண்டும். தமிழ்மொழி, தாய்மொழி என்று பேசிவரும் இக் காலத்திலாவது நாம் இதனை உடனே செய்ய வேண்டும்.

சென்னை புத்தகாலயப் பிரசார சங்கத்தினர் இத்தகைய மகத்தான வேலையில் சென்ற சில வாண்டுகளாகவே ஈடுபட்டிருக்கின்றனர். ஆனால், அவர்களிடம் வெளிவந்துள்ள நூல்களில்லாததாலும், பொதுமக்களிடையிருந்து போதிய ஒத்துழைப்பு இல்லாததாலும் அவர்கள் பணி முன்னேறவில்லை. பல குறைபாடுகளுக்கிடையே அவர்கள் தாங்கள் மேற்கொண்ட பணியை எப்படியாயினும் குற்றங்குறைகளிருப்பினும் நிறைவேற்றிவிடுவதென முடிவுகட்டியிருக்கிறார்கள். அவர்கள் கையில் பொருளும் போதிய அளவில்லை. ஆகவே இப் பணியைச் சென்னை அரசாங்கம் மேற்கொண்டு செய்வது நலம். அவர்கள் செய்துள்ளவற்றிலிருந்து மேலும் அரசாங்கத்தார் தொடங்குவரேயானால், அவர்கள் வேலையும் சுலபமாயிருக்கும். அரசாங்கத்தார் இப்பாதியை மேற்கொண்டால் தமிழுலகிற்குத் தொண்டு செய்தவர்களாவார்கள்.

ஒவ்வொரு அச்சுக்கூடத்திலும் பதிப்பிக்கப்படும் நூல்களில் மூன்று பிரதிகள் சென்னை புத்தகப் பதிவோருக்கு (Registrar of books) செல்லுகின்றன. அவற்றில் ஒரு பிரதியைத் தாம் வைத்துக்கொண்டு மற்ற இரு பிரதிகளையும் லண்டனிலுள்ள நிலயங்களுக்கு அனுப்புகிறார்கள். சென்னையிலுள்ள மியூசியம் நூல்நிலயமோ அன்றி கல்கத்தாவிலுள்ள அகில இந்திய நூல் நிலயமோ பிரதிகள் பெறுவதில்லை என்பது நோக்கற்பாற்று. புத்தகப்பதிவோர் மூன்று மாதங்களுக்கொரு முறை சென்னை அரசாங்க 'கெஜட்டி'ல் பதிவான புத்தகங்களின் விவரங்களை வெளியிடுகிறார். இதுவரையில் அச்சான புத்தகங்கள் அவரிடமிருக்கின்றன. பல பழம் நூல்கள் மடித்தால் உடையும் தருவாயிலும், பல உருத்தெரியாமலுமிருக்கின்றனவாம். வேறுபல பூச்சிகளுக்கும் பிறவற்றிற்கும் இலக்காகி வருவதாகவும் தெரிகிறது. ஆகவே அனைத்தும் கெடுவதற்கு முன்னே தங்களிடமே நூல்களிருப்பதால் சென்னை அரசாங்கம் எளிதாகப்புத்தகப் பட்டியலைத் தயாரிக்கலாம். புத்தகப் பதிவோர் இன்று வெறும் தணிக்கை அதிகாரியாக மாத்திரமேயிருப்பது வெள்ளிடைமலை. நூல்கள் நேரே அவர்களிடமிருப்பதால் அவர்கள் புத்தகாலய சங்கத்தாரை விட எளிதாகவும் சிறப்பாகவும் முடிக்கலாம்.

புத்தகாலயப் பிரசார சங்கத்தார் இவ்விஷயத்தில் அநுபவம் நிறைந்தவர்களானபடியால், அவர்கள் ஒத்துழைப்புடன் சென்னை அரசாங்கத்தார் இக் கைங்கரியத்தைத் தமிழ் மொழிக்காற்றுவார்களா? அவ்வாறான விவரமான பட்டியலும் அரசாங்கத்திற்கும் மிகவும் பயன்படும். பழைய நூல்களைப் பார்க்கவேண்டிய போதும் அதனைத்தேட நேரத்தை வீணைச் செலவழிக்காமல் இம்முறையினால் முன்னால் வெளிவந்துள்ள நூல்களை எளிதில் எடுக்கலாம். ஆகவே இம் முயற்சியில் அரசாங்கத்தார் ஈடுபடுவார்களேயானால், தமிழ் மொழிக்கு உதவி செய்தவர்களாவதுடன் தங்கள் காரியாலய வேலைப் பாட்டையும் சிறப்பித்தவர்களாவார்கள்.

லண்டன் மியூசியம் நூல் நிலயத்திற்கு ஒரு பிரதி அனுப்புவது போன்று சென்னை கண்காட்சி நூல் நிலயத்திலும் வெளிவரும் நூல்களில் ஒவ்வொரு பிரதியும் வைத்தார்களேயானால், பொது மக்களுக்கு மிகவும் சௌகரியமாயிருக்கும். எனக்கு உபாத்தியாயராயிருந்த வொருவர் தாம் பர்மிங்ஹாம் சென்றபோது அங்குள்ள ஷேக்ஸ்பியர் நூல் நிலயத்தைப் பார்த்ததாகவும், அதில் தமிழில் வெளிவந்துள்ள எல்லா ஷேக்ஸ்பியர் நூல்களும்

(337-ம் பக்கம் பார்க்க)

*கருணாஹரன்

(என். ரங்கநாதன்)

அந்த இரவு ஒரே நிசப்தமாக இருந்தது. அந்த நிசப்தத்தில் "என்னைத் தனியேவிடலாகுமா" என்ற பாட்டு தோட்டத்தின் ஏதோ ஒரு மூலையிலிருந்து கேட்டது. பலருக்கு முன்னிலையில் பாடுவதைவிட ஏகாந்தத்தில் பாடுவது எப்பொழுதுமே ரொம்ப நன்றாக இருக்குமல்லவா?

ராஜகுமாரி திடுப் என்று எழுந்திருந்தாள். திடுதிடுவென்று தோட்டத்திற்குள் சென்றாள். சப்தம் வந்த திக்கை நாடிச் சென்றாள். சப்தம், ஹரிஹரன் வீட்டிலிருந்து வருவதாகத் தெரிந்தது. ராஜகுமாரி மெதுவாக ஹரிஹரன் வீட்டின் முன்பக்கத்திலிருந்த அறையினுள் எட்டிப் பார்த்தாள். ஹரிஹரன் அம்பிகையின் படத்தின் முன் உட்கார்ந்துகொண்டு தன் இரு கைகளையும்கூப்பி, கண்களை மூடிக்கொண்டு பாடியபடியே அம்பிகையை ஸ்தோத்திரம் செய்து கொண்டிருப்பதைக் கண்டாள். அவள் அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டாள். அந்தப் பாட்டு முடிந்தவுடன் அவள் தன்னையுமறியாமல் தன்னுடைய சந்தோஷத்தை ஒரு கனைப்பினால் தெரிவித்தாள். ஹரிஹரன் இந்த சப்தத்தைக் கேட்டு கண்களைத் திறந்துபார்த்தான். ஜன்னலுக்கு வெளியே கருணா நிற்பதைப் பார்த்தான்.

"கருணாவா? இந்த அர்த்த ராத்திரியில் எங்கு வந்தீர்கள்? போங்கள், வீட்டுக்குப் போங்கள்" என்று சொல்லி அவளை வீட்டுக்குப் போகும்படி வணக்கமாகக் கேட்டுக்கொண்டான்.

அப்பொழுதுதான் கருணா நாம் எங்கிருக்கிறோம் என்பதை உணர்ந்தாள். சுற்றுமுற்றும் மனித சஞ்சாரமேயற்று, ஒருவித அரவமுமில்லாமல் இருந்த நிசப்தமான இரவைப் பார்த்தவுடன் அவளுக்கு உடம்பைப் பயத்தினால் கிடு கிடு என்று ஆடியது. அவள் எவ்விதம் அந்த சமயத்தில் அவ்வளவு துணிச்சலாக வந்தாள் என்பதை நினைத்து அவளே ஆச்சரியப்பட்டாள். எதிரே ஹரிஹரன் விளக்குடன் நின்றதைப் பார்த்ததும் அவளுடைய முகம் பூராவும் குபீலென்று சிவந்தது. நாணம் வந்து கவிந்துகொண்டது அவளால பேசமுடியவில்லை. ஒன்றும் சொல்லாமல் சரேலென்று திரும்பி அரண்மனையை நோக்கி நடந்தாள். ஹரிஹரனும் அவளைக் கொஞ்சதூரம் விளக்குடன் கொண்டுபோய் விட்டு விட்டுத திரும்பினான் அவள் அங்கு வந்ததேன்? அவளுடைய முகம் தன்னைக் கண்டவுடன் சிவந்ததின் காரணமெதுவாயிருக்கலாம் என்றெல்லாம் எண்ணிக்கொண்டே படுக்கையில் படுத்தான்.

* * *

மறுநாள் சாயந்திரம். அதே தோட்டம். ராஜகுமாரி கருணா தனியே உல்லாசமாய் உலாவிக்கொண்டிருந்தாள். தென்றல் காற்று மெதுவாக வீசிக்கொண்டிருந்தது. தோட்டத்திலுள்ள புஷ்பங்களின் வாசனை காற்றுடன் கலந்து வீசியது ராஜகுமாரியின் மனத்தை கவர்ந்தது.

"அவர் நம்மை விரும்புவாரா? அவருடைய சாரீரத்தின் இனிமையும், சரீரத்தின் இளமையும், நல்ல அழகும் கம்பீரமுமுள்ள முகத்தோற்றமும் என்னை அவர்பா லிழுக்கின்றனவே. நாம் ராஜகுமாரி யல்லவா? நாமாவது கேவலம் சாஸ்திரியின் மகனைக் கணவனாக அடைவதா? என்ன பைத்யக்காரத் தனம்?" என்று எண்ணினாள். "தனியே என்னைக் கைவிடலாகுமா" என்ற பாட்டு ஞாபகம் வந்தவுடன், அவளுடைய மனது "நாம் ஏன் அவரைக் கணவனாய் அடையக்கூடாது?" என்று எண்ணிற்று. மற்றொரு

* "3-12-39 முத்தில்" வெளிவந்ததன் தொடர்ச்சி.

தடவை முந்தின இரவு நடந்த சம்பவத்தை நினைந்து வியப்பும், ஆச்சரியமும், வருத்தமும் அடைந்தாள். இவ்விதம் அவள் மனது ஒரு பக்கமும் செல்லாமல் ஏதோ குருட்டு யோசனை செய்தபடியே உட்கார்ந்திருந்தாள். அவள் எவ்வளவு நேரம் அப்படி உட்கார்ந்திருந்தாள் என்பது அவளுக்கே தெரியாது. காலடிச் சப்தம் கேட்டுத் திரும்பினாள். அவளுடைய முகம் நாணத்தால் குபீரென்று சிவந்தது. தலை கீழே குனிந்தது. கால் கட்டை விரல் பூமியை நோண்டிற்று.

அங்கேவந்தவன் ஹரிஹரன். அவன் அவளைப் பார்த்து இத்தோட்டத்தில் கொஞ்சம் துளசி யகப்படுமா என்று கேட்டான்.

கருணா :—எனக்குத் தெரியாது.

ஹரிஹரன் :—அப்படியானால் நான் போய்த் தேடி, இருந்தால் எடுத்துக் கொள்ளட்டுமா? அதற்குத் தங்கள் அனுமதியை வேண்டுகிறேன்.

கருணா:—என்னைக் கேட்டுக்கொண்டுதான் தோட்டத்திற்குள் வந்தீரோ ?

ஹரி :—இல்லை. மன்னிக்கவும்.

கருணா :—அது மன்னிக்க முடியாதது. ஓர் இளம் ஸ்திரீ தனியாக தோட்டத்தில் இருக்கும்பொழுது நீர் இங்கே வந்ததை நான் எப்படி மன்னிக்க முடியும் ?

ஹரி :—தாங்கள் இங்கேயிருப்பதாக எனக்குத் தெரியாது. ஆகையால்தான் வந்தேன். மன்னிக்கவும்.

கருணா :—ஒரு குற்றமாயிருந்தால் பாதகமில்லை, மற்றொன்றும் கூட சேர்ந்திருக்கிறதே.

ஹரி :—மற்றொன்று ? என்ன அது ?

கருணா :—நான் இங்கே இருக்கமாட்டேன். துளசியைத் திருடிக்கொண்டு போகலாமென்றுதானே வந்தீர் ?

ஹரி :—இல்லை.

கருணா :—இல்லையென்றால் நான் நம்ப முடியாது. அதற்குள்ள தண்டனையை தாங்கள் அனுபவித்தே தீரவேண்டும்.

ஹரி :—என்ன தண்டனை ?

கருணா :—என் மன துக்கிற்கு இசைந்ததாய், எனக்கு இப்பொழுதிருக்கும் மனோ நிலைக்கிசைந்ததாய் இரண்டு பாட்டுகள் பாடவேண்டும்.

ஹரி :—பூ, இரண்டு பாட்டுத்தானே. ஆனால் இப்பொழுது உங்களுடைய மனோ நிலை எப்படியிருக்கிறதென்று எனக்கு எவ்விதம் தெரியும் ?

கருணா :—அதை அறிந்துதான் பாடவேண்டும். தங்களுக்குத் தெரியவில்லையா ?

ஹரி :—இல்லையே? பிறர் மனதை யறியும் சக்தி எனக்கு இல்லை.

கருணா :—பிறர் மனதை யறியும் சக்தி தங்களுக்கு இல்லை. ஆனால் பிறர் மனதைக் கவரும் சக்தி தங்களிடம் இருக்கிறது.

ஹரி :—நீங்கள் சொல்வது எனக்கொன்றும் புரியவில்லையே. தங்களுடைய மனோ நிலை இப்பொழுது எவ்விதம் என்று தெரிவித்தால் அதற்குத் தகுந்தபடி பாடிவிட்டுப் போய்விடுகிறேன். தயவுசெய்து தெரிவியுங்கள்.

கருணா :—(கொஞ்சம் தயங்குகிறாள்) ஓர் இளம் ஸ்திரீ ....

ஹரி :—ஓர் இளம் ஸ்திரீ ......அதற்கப்புறம் என்ன ?

கருணா :—(மௌனம்)

ஹரி :—சொல்லுங்கள். எனக்கு நேரமாகிறது.

கருணா :—(மௌனம்)

ஹரி :—இப்படிப் பேசாமலிருந்தால் எனக்கென்ன தெரியும். சரி, எனக்கு நேரமாகிறது நான் போய்வரட்டுமா ?

கருணா :—ஓர் இளம் ஸ்திரீ இவ்விதம் இந்த உல்லாசமான மாலைவேளையில் ஒரு இளம் வாலிபனுடன் தனியாக பேசிக்கொண்டிருக்கும் பொழுது எவ்வித மனோ நிலையை யுடையவளாயிருப்பாள் ?

ஹரி :—எனக்கொன்றும் புரியவில்லை. அதை நான் எவ்விதம் அறிய முடியும். பெண்களின் மனதை அறிவதே மஹா கஷ்டமாயிற்றே.

கருணு :—அறிய முடியவில்லையா? அதற்காக ஏன் பெண்களைத் தூஷிக்கிறீர்? இது மூன்ருவது குற்றமாகிறது. என் மனோ நிலையைத் தாங்கள் இன்னும் அறியவில்லையா?

ஹரி :—இல்லை.

கருணு :—நான் தங்களுடைய ஸங்கீதத்தின்மேல்..............

ஹரி :—சங்கீதத்தின்மேல் என்ன?

கருணு :—தங்கள் மேல்........

ஹரி :—என்மேல் என்ன?

கருணு :—கா......த......ல்.

ஹரி :—என்ன இது? என்னையா தாங்கள் காதலிப்பதாகச் சொல்கிறீர்கள்? நான் தங்கள் தகப்பஞரிடம் ஊழியம் செய்பவனல்லவா? தாங்கள் இதை மறந்து விடுங்கள். இது முடியாதது. (அப்பொழுதுதான் அவன் முதல்நாளிரவு நடந்த சம்பவத்தையும் நினைத்து, அவள் தன்னைக் கண்டபோதெல்லாம் அவள் முகம் சிவந்து விடுவதன் காரணத்தையும் உணர்ந்தான்).

கருணு :—நான் தங்களை எவ்விதம் மறப்பது என்ருல் முடியவில்லையே.

ஹரி :—நான் ஒரு நாளும் தங்களிடம் ஒருவிதமானஎண்ணமும்கொள்ளமாட்டேன். ஆகையால் தாங்கள் என்னை மறந்துவிடுவதே நல்லது.

கருணு :—தாங்கள் என்ன சொல்லியபோதிலும் நான் தங்களை மறப்பதென்பது அசாத்யமான காரியம். அடைந்தால் உங்களையே கணவனுக அடைவேன். இல்லாவிட்டால் இறப்பேன். உங்களைப் பெண்பழி வந்து சாரும். இது சத்தியம்.

ஹரி :—தாங்கள் முன்பின் யோசியாது சிறுபிள்ளைத்தனமாக சத்தியம் செய்வதைக் குறித்து நான் வருந்துகிறேன், தாங்கள் என்னை மறந்துவிடுவதே நல்லது. சரி, நான் சென்று வருகிறேன். (போகிருன்.)

கருணு :—(திடுதிடுவென்று அவன் பின்ஞல் ஓடுகிருள். அவனை வழி மறித்து கண்களில் நீர் ததும்ப) என்னைத் தாங்கள் நிராகரிக்கக்கூடாது. நீங்கள் வெறுத்தால் விஷமருந்தால் உயிர் விடுவது திண்ணம். என்னை ஆதரிப்பது உங்கள் கடமை (அவன் காலில் விழ எத்தனிக்கிருள்)

ஹரி :—(அவளைத் தாங்கி, கைகளைப் பிடித்துத் தூக்கி நிறுத்துகிருன்) என்ன? என் காலிலா தாங்கள் விழுவது? தர்ம சங்கடமாக வல்லவோ யிருக்கிறது.

அவன் தாங்கி நிறுத்தும்பொழுது தன் கை அவள்மேல் பட்டபொழுது அவன் தேகம் பூராவும் ஏதோ ஒரு நூதன சக்தி ஓடுவதுபோல உணர்ந்தான். அதே சமயம் அவளுடைய முகமும் ஆனந்தத்தால் மலர்வதையும் கண்டான்.

அந்தஸ்பர்சத்தின் மகிமைதானென்ன? அவன் இவ்வளவு நேரம் கொண்டிருந்த விரக்தி யெல்லாம் எங்கேயோ ஓடி மறைந்தது. அவன் அவளைத்தன் பிடியிலிருந்து விட விரும்பவில்லை. அவர்கள் இவ்விதம் ஆலிங்கனம் செய்த படியே எவ்வளவு நேரம் இருந்தார்களென்று அவர்களுக்குத் தெரியாது. கருணுவின் தோழி அவளை மஹாராணி கூப்பிடுகிருர்கள் என்று எங்கிருந்தோ சொன்னதைக் கேட்டவுடன் இருவரும் மறுபடியும் இவ்வுலகுக்குத் திரும்பி வந்தனர். இருவரும் திடுக்கிட்டுவிட்டனர்.

கருணு :—(அவனுடைய பிடியிலிருந்து தன்னை விலக்கிக்கொண்டே) நாளைக்கு இதே சமயத்தில் இவ்விடத்திற்கு வாருங்கள். (என்று சொல்லிக் கொண்டே மறைந்தாள்) ஹரிஹரன் அவள் போன திக்கையே சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு நேரமானதை யுணர்ந்து தன் வீடு திரும்பினுன்.

கொஞ்சநாளில் இருவருடைய சந்திப்பும், பேச்சுகளும், நடவடிக்கைகளும் பல விதங்களில் மாறுதலடைந்து விட்டன.

இராஜகுமாரியின் கலியாணத்திற்காக ஏற்பாடுகள் பலமாக தனபுரியில் நடந்து வந்தன. கர்னுடக தேச மன்னனின் புத்

திரனுக்கு அவளைக் கலியாணம் செய்து கொடுப்பதாகத் தீர்மானம் செய்யப்பட்டிருந்தது. கருணு தன் தாயாரிடம் தான் ஹரிஹரனையே மணக்கப்போவதாக எவ்வளவோ விதங்களில் மன்ருடினள். ஆனல் ஒன்றும் பலிக்கவில்லை. அதையறிந்த அரசன் அவளைக் கண்டித்தான். அவள் ஹரிஹரனையே பார்க்கமுடியாதபடி, அவனுடைய சொத்துகளைப் பறிமுதல் செய்து, அவனை நாட்டைவிட்டு வெளியேறும்படி கடுமையான கட்டளை யிட்டான்.

கலியாணத்திற்கு இன்னம் இரண்டே நாட்கள்தான் இருந்தன. தனபுரியெங்கும் ஏக அமர்க்களம், கொண்டாட்டம். ஊரெங்கும் அலங்கரிக்கப்பட்டது. அழைப்பு அனுப்பப்பட்டு வந்தவர்களும், அரசனுடைய தயவை நாடுபவர்களும், மற்றவர்களுமாக அநேகர் கூடிவிட்டனர்.

அன்று இரவு இரண்டாவது ஜாமம் கழிந்து மூன்ருவது ஜாமம் ஆரம்பமாகிவிட்டது. ஒரே இருட்டு. ஆந்தைகளும், கோட்டான்களும் எங்கு பார்த்தாலும் அலறிக்கொண்டிருந்தன. அந்த பயங்கரமான நேரத்தில் அரசனுடைய தோட்டத்திலுள்ள குளத்தை நோக்கி ஓர் உருவம் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்துக் கொண்டே வேகமாகச் சென்றது.

"தொப்" என்ற ஒரு சத்தம்! அதனுடன் கூடவே குளத்து ஜலம் "சளபள" என்ற சப்தத்துடன் சிறு அலைகளாகக் கிளம்பி எதிர்க்கரையை முட்டியது.

மறுநாள் காலை கருணுவின் பிரேதம் குளத்திலிருந்து எடுக்கப்பட்டது.

மேற்படி சம்பவம் நடந்து மூன்று மாதங்களாயின. உதயபுரியின் ஒரு தெருவில் ஏகக்கூட்டம். அவ்வளவு பெரிய கூட்டத்திற்குக் காரணமென்ன? அங்கு தாடியுடனும், மீசையுடனும், அழுக்கடைந்த உடையுடனும் கூடிய ஓர் பிச்சைக்காரன் தன்னுடைய தேவாமிர்தம்போன்றபாட்டினல் அங்குள்ள அனைவருடைய மனத்தையும் கவர்ந்தான். அவன் முன்பு, வெள்ளி, செம்பு, நாணயங்கள் நிறையக் கிடந்தன. அவன் அந்தப் பாட்டைப் பாடிவிட்டு நிறுத்தினன். அங்கு வந்திருந்தவர்கள் அவன் மற்ருெரு பாட்டுப் பாடுவான் என்று எதிர்பார்த்தார்கள்.

"கருணு" என்ற பெரும் அலறல். அங்கு அவன் முன்பிருந்த காசையெல்லாம் ஜனங்களின்மீது வீசி யெறிந்தான். கூட்டம் கலைய ஆரம்பித்தது. "கருணு, கண்மணி கருணு" என்று கத்திக்கொண்டே அந்தக் கூட்டத்தின் மத்தியில் புகுந்து தெருக்கோடியிலிருந்த ஓர் பாழும் சத்திரத்தை நோக்கி ஓடினன்.

கூட்டத்திற்கு வந்திருந்த ஒருவர் "பாவம், பைத்தியம்போலிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே தன் நடையைக் கட்டலானர்.

(333-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டதாகவும் அவ்வளவு அளவிற்குத் தாம் நம் நாட்டில் கண்டதுமில்லை கேட்டது மில்லை என்றும் கூறினர். நாம் நமது தாய்மொழி நூல்களில் எவ்வளவு அசிரத்தையாயிருக்கிருேமென்பதற்கும் ஐரோப்பியர் ஊக்கத்திற்கும் வேறு என்ன எடுத்துக் காட்டவேண்டும்? தமிழுலகம் வீண் வகுப்புச் சண்டையிலிறங்காமல் ஆக்க வேலையில் என்று இறங்கும்?

சென்னை அரசாங்கம் ராஜதானியில் பிரசுரமாகும் நூல்களின் தொகையைப் பிரசுரிக்கும் பணியை மேற்கொண்டால், பல்கலைக் கழகமோ அன்றி புத்தகாலய சங்கமோ ராஜதானியை விட்டுபிற இடங்களில் (புதுச்சேரி, சிங்கப்பூர், பர்மா முதலியவை)பிரசுரமாகும் நூல்களையும் சேர்த்து மொத்த பட்டியலொன்றை வெளிப்படுத்தலாம். அரசாங்கம் தன் வேலையைச் சிறப்புறச் செய்தால் மற்ற வேலைகளை பிறர் செய்ய எளிதில் முடியும். இப்பணியில் ஈடுபடும்படி அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டியது எல்லா தமிழ் அன்பர்களின் பொறுப்பாகும்.

பழைய நாயே!

(எஸ். ஸோமஸ் கந்தன்)

நாற்புறமும் மலைகள் சூழ்ந்த ஒரு பெரிய காடு. அதில் மனித சஞ்சாரமே கிடையாது. சிங்கம், புலி, கரடி முதலிய துஷ்ட மிருகங்கள் இந்த வனத்தில் வசித்து வந்தன. பெரிய மரங்கள் அடர்ந்து நிறைந்து இருந்தமையால் இந்தக் காட்டிற்குள் போக முடியாது. வழியெல்லாம் கல்லும் முள்ளும் நிறைந்திருக்கும். இந்தப் பயங்கரமான காட்டில் ஒரு நதி ஓடிக்கொண்டிருந்தது.

இந்த நதியின் கரையில் ஒரு அழகான சோலை. வெயில் தெரியாதபடி எப்பொழுதும் இந்தச் சோலையில் 'ஜில்' என்று காற்று வீசிக்கொண்டிருக்கும்; பறவைகள் சதாகாலமும் கலகல வென்று சப்தித்து விளையாடிக் கொண்டிருக்கும். பக்கத்தில் மலையிலிருந்து அருவி விழும் சப்தம் ஜோ என்று இடைவிடாமல் கேட்டுக்கொண்டிருக்கும்.

இந்த அழகிய சோலையில் அநுபமர்—என்னும் முனிவர் பர்ணசாலை கட்டிக்கொண்டு அதில் வசித்து வந்தார்.

அநுபமர் எல்லா ஜீவராசிகளிடத்திலும் அன்புடையவர். சிங்கம், புலி முதலிய துஷ்ட மிருகங்கள்கூட இவரிடம் அன்பு செலுத்தும். இவரை அன்பே உருவாக வந்தவர் என்று கூறலாம்.

ஒருநாள், பக்கத்து ஊரிலிருந்து வழிதப்பி வந்த நாயொன்று, இந்தக் காட்டில் அங்குமிங்கும் அலைந்து கடைசியில், அநுபம ரிஷி ஆசிரமத்துக்கு வந்து சேர்ந்து படுத்து விட்டது. இந்த நாயைக்கண்டதும் மகரிஷிக்கு அதனிடத்தில் இரக்கம் உண்டாயிற்று. முனிவர் ஜீவகாருண்யமுள்ளவ ரல்லவா? நாய்க்கு ஆகாரங்கொடுத்து அதைத் தமது ஆசிரமத்திலேயே வளர்த்து வந்தார்.

முனிவர் எங்கு சென்றாலும், நாயும் அவரைத் தொடர்ந்து செல்லும. அதற்கு ஆசிரம வாழ்க்கை சஞ்சலமற்ற வாழ்க்கையாகத் தோன்றியது.

ஒரு நாள், காட்டில் மனம்போன போக்கில் திரிந்து தின்று கொழுத்த ஒரு மான், இந்த நாயைப் பார்த்துத் துரத்தித் தன் கொம்பினால் தூக்கி யெறிய வந்தது. நாய் இதைக் கண்டு பயந்து ஆசிரமத்திற்கு வேகமாக இரைக்க இரைக்க ஓடி வந்து அநுபம ரிஷியின் பின்னால் பதுங்கிக்கொண்டது. மானும் ஆசிரமத்துக்கு வந்து விட்டது. முனிவர் நாயின்மேல் தமது கமண்டல நீரைத் தெளித்துத் தமது தபோ வன்மையினால் அதையும் ஒரு கொழுத்த மானாக்கிவிட்டார். இந்த நாய் மானைக் கண்ட நிஜ மான்

பயந்து ஓடி விட்டது. நாயும் மானுருவத்துடனேயே ஆசிரமத்திலிருந்தது.

இப்படியிருக்கையில் ஒரு நாள், ஒரு வேங்கை இந்த மானைப் பார்த்தது. அது நல்ல பசியுடனிருந்தது. வேங்கைக்கு நாக்கில் ஜலம் ஊற ஆரம்பித்து விட்டது. வேங்கையைக் கண்ட மான் பயந்து துள்ளிக் குதித்து முனிவரிடம் வந்தது. முனிவர் அதன் பரிதாபகரமான பார்வையைக் கண்டு அதையும் ஒரு பெரிய வேங்கையாக்கிவிட்டார். இந்த மான் வேங்கையைக் கண்ட உண்மை வேங்கை பயந்து ஓடிவிட்டது. நாய், வேங்கை யுருவத்துடன் அநுபம ரிஷி ஆசிரமத்திலேயே யிருந்தது.

ஒரு நாள் ஒரு மதம் பிடித்த யானை, தனது பிளிறு்றோசையினால் நான்கு திசைகளிலும் எதிரொலி யுண்டாக்கிக்கொண்டு அட்டகாசத்துடன் வந்தது. அதைக் கண்டதும் இந்த நாயாகிய வேங்கைக்கு உடல் நடுக்கமெடுத்தது. யானை தன் எதிரிலிருந்த மரங்களை யெல்லாம் பிடுங்கி வீசி யெறிந்துகொண்டு வந்தது. நாய் வேங்கை முனிவரிடம் சரணமடைந்தது. உடனே முனிவர் அதை யொரு சிங்க மாக்கினார். அது வீரகர்ஜனை செய்தது. இந்த வீரகர்ஜனையைக் கேட்ட யானை மதம் தெளிந்து பலங்குன்றி உயிர் துறந்தது.

இந்தச் சிங்கம் நிர்ப்பயமாய்க் கானகத்தில் மனம்போனபடி திரிந்துகொண்டிருந்தது. ஒருநாள் இந்தச் சிங்கம் தனித்த ஓரிடத்தில் அமர்ந்து யோசிக்கத் தொடங்கியது.—"முதலில் நாயாயிருந்த நம்மை இந்த முனிவர் மானாக்கினார். பிறகு வேங்கையாக்கினார். அதிலிருந்து மிருகேந்திரனாகிய சிங்கமானேம். ஒரு நாளில்லாவிட்டால் ஒருநாள் நாம் இந்த முனிவருக்குத் தீங்கு செய்ய நேரிடும். அப்படி நேரிட்டால் முனிவர் நம்மைப் பழையபடி நாயாக்கி விடுவார். ஆதலால் இவரையே கொன்று விட்டால்?............நாம் நிர்ப்பயமாய்க் கவலையற்றிருக்கலாம்" — என்று உண்ட வீட்டிற்கிரண்டகம் நினைத்தது.

சமயம் பார்த்துக் கொண்டேயிருந்து, ஒரு நாள் மகரிஷி ஜபம் செய்து கொண்டிருக்கும் பொழுது அவர் மேலே பாய்ந்து கொல்ல எண்ணங்கொண்டு வந்து கர்ஜனை செய்தது. மூன்று காலங்களையும் உணரவல்ல அநுபமரிஷிக்கு இது தெரியாமலிருக்குமா? உடனே அவர் நகைத்துக் கமண்டல நீரை யெடுத்து அதன்மேல் தெளித்து, "பழைய நாயே இப்படிக் கெட்டாயே!" என்றார். உடனே இந்தச் சிங்கம் பழையபடி நாயாகிவிட்டது. சிங்கமாயிருந்த பொழுது இருந்த பலம் குறைந்து பலவீனமடைந்து முன்பு இருந்த நிலையை யடைந்தது.

பரசுராம சித்த ஔஷதாச்ரமம்

திருவண்ணாமலை
தலைமை ஆபீஸ்.

59-A, லாய்ட்ஸ் ரோடு,*
ராயப்பேட்டை, மதராஸ்.
(பிராஞ்சு)

நீடித்த வியாதிகளை, முப்பு குருவால் செய்த ஔஷதங்களால் நிவர்த்தி செய்யப்படும். டியூபர்குலோஸிஸ் என்ற க்ஷய ரோகத்திற்கும், நீரழிவு ரோகத்திற்கும் விசேஷ ஔஷதங்கள் இருக்கின்றன.

முப்புகுரு சேர்ந்த "சித்த எண்ணய்"

இது சர்வரோக நிவாரணி பரம சஞ்சீவி. ஒரு தடவை உபயோகித்தால் இதன் பெருமை தெரியும். அனேக டாக்டர்களால் பரிசீலனை செய்யப்பெற்றது. குழந்தைகள் பால் கட்டிகளுக்கும், ஈரல் கட்டிகளுக்கும் நிகரற்ற ஔஷதம்

ஸோல்டிஸ்டிரிபியூடர்ஸ்: **ஸாரதா ஸ்டோர்ஸ், காரைக்குடி.**

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:

அப்பா அண்டு கம்பெனி,
மதராஸ்

T. N. நாகலிங்கம் பிள்ளை,
மதுரை.

மீனாக்ஷி ஸ்டோர்ஸ்,
தேவகோட்டை

T. N. சோக்கலிங்கம் பிள்ளை,
அண்டு சன்ஸ், மதுரை.

* டாக்டர் பரசுராம் அவர்கள் மதராஸ் வாசிகளின் சௌகரியத்தின் பொருட்டுப் பலர் வேண்டுகோளுக்கிணங்கி; ஒவ்வொரு ஆங்கில மாதமும் 1-ம் தேதிமுதல் 10 தேதிகள்வரையில் பிராஞ்சு ஆபீஸில் தங்குவார்.

ஈரோடு டிஸ்திரிக்ட் மு. கோர்ட்டு

O. P. No. 3 of 1940

S. இரத்னவல்லி அம்மாள்—மனுதாரி

இதனால் சகலருக்கும் தெரிவிப்பதென்னவென்றால் இந்த மனுதாரி இந்த கோர்ட்டில் இந்தியன் சக்ஷன் ஆக்ட்படி தன் புருஷன் காலஞ்சென்ற U. K. ரங்கசாமி அய்யங்கார் பேரிலிருக்கும் ரிசர்வ் பாங்கு பங்குகள் 5-க்கு தன் பேரில் மாற்றி சர்ட்டிபிகேட் பெற மனு செய்து கொண்டிருப்பதால், இதற்கு ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஷை கோர்ட்டில வாய்தா தேதி 5-2-1940ல் தெரிவித்துக்கொள்ள வேண்டியது.

Erode
16-1-40.

கே. ஆர். கிருஷ்ணஸ்வாமி
பி.ஏ., பி.எல்.
மனுதார் வக்கீல்.